சுப. இரத்தினகிரி

நூற்பாதை

சுப. இரத்தினகிரி
srathinagiri@gmail.com
http://www.rathinagiri.in

இறை வணக்கம்:

இயற்கை விரிக்கும் இப்பரந்து பட்ட உலகினூடே, எண்ணக் கடலில் முகிழ்ந்து, ஒலியெனும் மேகமாய்க் குவிந்து, கேட்கும் செவியெலாம் குளிர்விக்கும் அருமழையாகவும், எழுத்தெனும் மலராய் மலர்ந்து இயலிசை நாடகமெனும் நார் தொடுத்து வாசிக்கும் வாசகரின் மனத்திலெல்லாம் மணம் பரப்பும் ஆரமாகவும், தொன்று தொட்டு விளங்கும், ஈடிணையற்ற, தேனினும் இனிய தமிழ் மொழியில், என்றுமுள்ள இறையின் திருவடியினை இறைஞ்சுகின்றேன்.

குரு வணக்கம்:

இற்றைக்கு தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு (கி.பி. 12ம் நூற்றாண்டு) முந்தையதாயினும் இக்கணமும் புதியதாய் இலங்கும் இலக்கண நூலாம் நன்னூலை ஆக்கித் தருமாறு சீயகங்கன் (மூன்றாம் குலோத்துங்க சோழனின் கீழ் தொண்டை நாட்டுச் சனகாபுரியை ஆண்ட சிற்றரசன்) வேண்ட, அதை யாவரும் பயன்பெறும் வண்ணம் உருவாக்கித் தந்த சன்மதி முனிவரின் சீடர் சமண மதத்தைச் சார்ந்த பவணந்தி முனிவர் தம் பாதந் தொழுகின்றேன்.

நூல் வியப்பு:

நமது நன்னூல் ஆசிரியரின் பாணி இருக்கின்றதே, அதை நினைக்கும் போதெல்லாம் எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அத்தனை ஆண்டுகளுக்கு முன்பே "இது இவ்வளவு தானப்பா!" என்று ஒரு சிறு குழந்தையின் கைப்பிடித்து அழைத்துச் செல்வது போல் நம்மை அழைத்துச் சென்று எழுதுகலையின் எல்லையில் நம்மை உலவ வைக்கின்றார்.

ஒரு இலக்கண நூலில், தேவையான இடங்களில் சுருக்கமாவும், தேவையான இடங்களில் விரித்தும், எண்ணற்ற பொருத்தமான உவமைகளுடனும், சற்றே நகைச்சுவை தூக்கலாகவும் கூட இவ்வாறெல்லாம் சுவாரசியமாகவும் சுவைபடவும் எழுத முடியுமா என்று தெரியவில்லை!

ஏதோ மற்றவர்களுக்கு எல்லாம் சட்டாம் பிள்ளை போல் இலக்கணத்தைக் காட்டி விட்டு "ஊருக்குத் தான் அந்த உபதேசம்" என்றில்லாமல், தாம் எழுதிய இலக்கணத்தின் வழி முதலில் தானே நின்று பவணந்தியார் உதாரண புருடராகத் திகழ்ந்திருக்கின்றார்.

முகப்பு:

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான தொல்காப்பியரின் தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றியும், அதே சமயத்தில்

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையினானே!

என்று காலத்திற்கேற்ப வழக்கில்லாப் பழையன கழித்தும் புதுமையை வரவேற்றும் அன்று நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் உரைத்த நூலில் இருந்து, நமது தற்கால மாணவர்களுக்கும், ஏனைய கல்வியிலும் எழுத்திலும் ஆர்வம் உள்ளவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் இத்தொடரை உருவாக்கினால் எப்படி இருக்கும் என்ற விருப்பத்தின் செயல்வடிவமே இத்தொடராகும்.

வரலாற்றில் யாரும் இதுவரை செய்யாத ஒன்றை இப்போது செய்ய முனைந்திருக்கின்றேன். நூலுக்கு விரிவுரை எழுதுவது தான் முறை மற்றும் மரபு. எங்கேனும் முன்னுரைக்கு விரிவுரை எழுதிக் கண்டிருக்கின்றீர்களா?

தமிழ் மொழியே பெருங்கடலெனும் போது அதன் இலக்கணம் என்பது எவ்வளவு விரிவாக இருக்கும்? நன்னூலின் மொத்தப் பகுதிக்கும் உரையெழுதும் அளவுக்கு அடியேனுக்கு வயதுமில்லை, படித்ததுமில்லை. அஃது இக்கட்டுரைத் தொடரின் நோக்கமும் இல்லை.

நன்னூலின் முன்னுரைப் பகுதியான பாயிரத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அதிலும் அனைத்துப் பாடல்களுக்கும் வரிக்கு வரி உரையெழுதாமல் என்னால் முடிந்த அளவிலும் தொடருக்குத் தேவையான அளவிலும் சில பாடல் வரிகளை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவற்றை விளக்க முற்படுகின்றேன். சுருக்கமாகச் சொன்னால் இது நூலின் அறிமுகத்துக்கே அறிமுகம் செய்வது ஆகும்.

ஆறுமுகநாவலர், மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர் முதல் பல்வேறு தமிழறிசர்களும், தமிழ் ஆசிரியர்களும், சான்றோர்களும் எழுதிய பேருரைகளின் ஊடே இச்சிறுவனின் பாயிர உரையையும் பொருத்திப் பார்க்கலாம் என நினைக்கக்கூட இயலாது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொண்டு இத்தொடரில் குற்றமிருப்பின் தவறாது சுட்டிக் காட்டித் திருத்த வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

காரணம்:

இன்றைய போட்டிகள் நிறைந்த காலகட்டத்தில் ஒரு பாடத்தை எவ்வாறு கற்க வேண்டும், நாம் நினைத்ததையும் கற்றதையும் தேர்வில் எவ்வாறு எழுத வேண்டும் என்பதெல்லாம் அறியாமலேயே மாணவர்கள் கற்கின்றார்கள். தேர்வும் எழுதுகின்றார்கள். ஒரு குறிப்பிட்ட காலம் மற்றும் தளம் வரைக்கும் தேறியும் வருகின்றார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிப் போட்டி வலுப்பெறும் போது சமர்த்தாகக் (Smart) கற்கும் மற்றும் எழுதும் சூக்குமம் அறிந்தவர்கள் வெற்றி பெறுகின்றார்கள். ஏனையோர் மிகவும் அல்லல்படுவதைக் காண்கின்றோம். எனது அனுபவம் இதற்குச் சற்றும் மாறுபட்டதல்ல!

இலக்கணம் அறிந்து, எழுதுகலையின் நுணுக்கங்கள் அறிந்து, எழுத ஆரம்பித்து விட்டால் எத்தகைய சூழ்நிலையையும் கைகொள்ளும் பக்குவமும் துணிச்சலும் வந்து விடுவதை அனைவரும் அனுபவப் பூர்வமாக உணரலாம்.

நாம் பெற்ற பேறு இவ்வையகமும் பெற வேண்டும் என்ற எண்ணமும், குழந்தைப் பருவத்திலேயே அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அரிய எழுத்துக் கலையின் இலக்கணத்தைப் பலரும் இன்னும் அறியும் வண்ணம் எளிய பழகு தமிழில் எழுதலாம் என்ற ஆர்வமும் இத்தொடர் உருவாகக் காரணங்களாகும்.

இத்தொடரைப் பின்பற்றி ஒருவரேனும் எழுத்துக் கலையில் ஆர்வமுற்று நன்னூல் இலக்கணப் பாதையில் நடப்பாரேயின் அதுவே **நூற்பாதை** எனும் இத்தொடரின் வெற்றியாம்.

நுழைவாயில்:

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்
பாயிரம் பொது சிறப்பு என இரு பாற்றே!

பாயிரம் எனப்படும் நூலின் அறிமுகமாவது -

- முகவுரை (முன்னுரை - Preface),
- பதிகம் (நூலில் பதிந்துள்ள பொருளைக் கூறுவது பதிகம்)
- அணிந்துரை, (நூலைப் பற்றி மற்றவர்கள் யாரேனும் கூறுதல்)
- நூலின் முகம் (Synopsis)
- புறவுரை (வெளிக்குறிப்புகள்-References),
- தந்துரை (மூலத்திற் கூறப்படாத சொற்பொருள் முதலியவற்றை வருவித்துரைத்தல்),
- புனைந்துரை (அலங்காரத்துடன் கூறுதல்)

ஆகிய உறுப்புகளைக் கொண்டிருக்கும்.

இதில் பாயிரம் பொதுப்பாயிரம் என்றும் சிறப்புப் பாயிரம் என்று இரண்டு வகைப்படும். பொதுப்பாயிரம் எனப்படுவது எல்லா நூல்களிலும் இருக்கும் பொதுவான அம்சங்களை உள்ளடக்கியதாகும். சிறப்புப் பாயிரம் என்பது அந்தக் குறிப்பிட்ட நூலைப் பற்றிச் சிறப்புப் படுத்திக் கூறுவது ஆகும். பழந்தழிழ் நூல்கள் ஒருசிலவற்றில் தான் பொதுப்பாயிரம் உண்டு.

நன்னூல் என்பதே ஒரு மொழியின் இலக்கணம் பற்றிக் கூறுகின்ற படியால் அதன் முன்னுரையான பொதுப்பாயிரம் இங்கே ஒரு நூல் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்று அமையப் பெற்று காலகாலத்துக்கும் பயனுள்ளதாக இருக்கின்றது! நன்னூலின் மொத்தப் பாடல் வரிகள் 462 ஆகும். இதில் பாயிரம் 55 வரிகளும் இலக்கண நூல் 407 வரிகளும் கொண்டுள்ளது.

நாம் இந்தக் கட்டுரைத் தொடரில் காணவிருப்பது பொதுப்பாயிரம் எனப்படும் பாயிரவியலில் எழுதப்பட்டிருக்கும் 55 வரிகளில் ஒரு சில வரிகளே ஆகும்! முன்னுரையிலிருக்கும் இந்த 55 வரிகளுக்குள்ளே தான் அறிவியல் பூர்வமான எத்தனை எத்தனை விஷயங்களைப் பொதிந்து வைத்துள்ளார் நமது ஆசிரியர் என்பதைக் காணும் போது இதைப் பொதுவாகவே நன்னூல் சூத்திரம் என்ற பெயரிலேயே தமிழறிசர்கள் அழைப்பது எவ்வளவு பொருத்தமானது என்பது புலப்படும்!

இதே போன்ற ஒரு புத்தகம் ஆங்கிலத்திலோ அல்லது வேறு மேநாட்டு மொழிகளிலோ இருந்திருந்தால் இந்நேரம் எவ்வளவு போற்றிப் புகழப்பட்டிருக்கும் என்று நினைத்து வருத்தம் தான் மேலிடுகின்றது.

பொதுப்பாயிரத்திலும் சிறப்புப் பாயிரத்திலும் எவையெல்லாம் இடம் பெற வேண்டும் என்று நன்னூல் தானே இலக்கணமாய் நின்று காட்டுகின்றது.

பாயிரம்:

பாயிரம் என்ற சொல்லுக்கு வரலாறு என்பதே பொருள். நூலில் பாயும் பொருளை முன்னின்று விளக்குவதால் பாயிரம் என்று வழங்கப்பட்டது. தற்காலத்தில் முன்னுரை என்ற பெயரில் வழங்குகின்றது.

நூலே நுவல்வோன் நுவலும் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூல்கும் இவை பொது பாயிரம்

பொதுப்பாயிரம்:

- நூல் (நூலே)
- நூலைக் கற்பிக்கும் ஆசிரியர் (நுவல்வோன்)
- ஆசிரியர் மாணவருக்குப் பாடம் நடத்தும் முறை (நுவலும் திறனே)
- மாணவர்கள் (கொள்வோன்)
- மாணவர்கள் பாடம் கற்கும் முறை. (கோடல்)

ஆகிய ஐந்தும் சேர்ந்து பொதுப்பாயிரம் ஆகும்.

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூல் பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயன் ஓடு ஆய் எண் பொருளும்
வாய்ப்ப காட்டல் பாயிரத்து இயல்பே

சிறப்புப் பாயிரம்:

- ஆசிரியர் பெயர் (ஆக்கியோன் பெயரே)
- நூல்வந்த வழி (வழியே)
- நூல் விளங்கும் நிலத்தின் எல்லைகள்.(எல்லை)
- நூலின் பெயர்
- நூலின் யாப்பு (தொகுத்து எழுதல், விரித்து எழுதல், இரண்டும் செய்தல், மொழிபெயர்த்தல் போன்றவற்றைச் சொல்லுதல்)
- நூற்பொருள்
- நூலை யார் படிக்கவேண்டும் (கேட்போர்)
- அவர்களுக்குக் கிடைக்கும் பயன் யாது? (பயன்)

ஆகிய எட்டும் சேர்ந்து சிறப்புப் பாயிரம் ஆகும்.

ஆக, நன்னூலின் பொதுப்பாயிரத்தில் ஒரு நூல், ஆசிரியர், மாணவர் எவ்வாறு அமைய வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. மிக நேர்த்தியாகவும் ஆணித்தரமாகவும் காலத்தைக் கடந்து இன்று வரை பொருத்தமானதாகவும் விளக்கும் இந்தப் பொக்கிசத்தைக் கற்பிக்கும் மற்றும் கற்கும் அனைவரும் உணர்ந்து உள்வாங்கி சிறப்புப் பெறலாம்.

(தொடரும்)

பொதுப்பாயிரம்:

நூல்:

நூலின் அறிமுகமான பொதுப்பாயிரத்தில் முதலில் நூலைப் பற்றியும் அதன் பண்புகளையும் சொல்ல வேண்டும் (*குரலே)* என்று முதல் பாடலில் பார்த்தோம் அல்லவா? அவரது இந்நூலின் பெயரே நன்னூல். எனவே அதைப் பற்றிய பண்புகளை உரைத்தல் தானே அந்நூலின் பொதுப்பாயிரமாக இருக்க முடியும்? அதனால் நமக்கு விளையும் பயன்கள் கணக்கிலடங்கா!

நூல் வரலாறு/இயல்பு/பண்புகள்:

ஒரு நூல் என்பது எவ்வாறெல்லாம் இருக்கவேண்டும் என்னும் வரையறையை உருவாக்கியிருக்கின்றார் பவணந்தி முனிவர். இது ஒரு நூலுக்கு மட்டுமான இலக்கணமாக மட்டும் கொள்ளாமல், நாம் தற்காலத்தில் உருவாக்கக் கூடிய கட்டுரைகள், படிக்கக் கூடிய பாடத்திட்டங்கள், எழுதக்கூடிய தேர்வு, இன்னும் ஏன் எந்த ஒரு தகவல் தொடர்புக்குமே (Communication) இலக்கணமாகக் கொள்ளலாம். இதை நாம் அறிந்து கொண்டு நன்றாக உள்வாங்கி, மாணவர்கள் அதன்வழி நடந்தார்களேயானால் நிச்சயமாக எந்த ஒரு பாடமாகினும் அதில் சிறந்து விளங்குவது மட்டுமின்றி எந்த ஒரு தேர்விலும் எளிதில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று முன்னிலை வகிக்கமுடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இனி, பாடலைக் காண்போம்.

நூலின் இயல்பு ஏ நுவலின் ஓர் இரு
பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்று ஆய்
நால் பொருள் பயத்து ஓடு எழு மதம் தழுவி
ஐ இரு குற்றம் உம் அகற்றி அ மாட்சி ஓடு
எண் நான்கு உத்தியின் ஓத்து படலம்
என்னும் உறுப்பின் இல் சூத்திரம் காண்டிகை
விருத்தி ஆகும் விகற்ப நடை பெறும் ஏ

இப்போது பாடலின் உரையைக் காண்போம். ஒரு நூல் எவ்வாறிருக்க வேண்டும்?

நாம் நூலின் இயல்பைக் கூற முற்பட்டால், ஒரு நூலானது, இரு பாயிரங்களைக் கொண்டதாகவும், மூன்று வகைகளில் ஏதேனும் ஒன்றாகவும், நான்கு பயன்களையும் அளிக்க வல்லதாகவும், ஏழு மதங்களைத் தழுவியதாகவும், பத்துக் குற்றங்களை (ஐ இரு 5 * 2) நீக்கியதாகவும், அது போன்றே பத்து அழகுகளைக் கொண்டதாகவும், முப்பத்தியிரண்டு (எண் நான்கு 8 * 4) உத்திகள் உடனும், ஓத்து மற்றும் படலம் என்னும் உறுப்புகளைக் கொண்டும், சூத்திரம் என்று சுருக்கிக் காட்டும் வகையிலும், காண்டிகை, விருத்தி என்று விரித்துக் காட்டி நடைபெறும் வகையிலும் இருத்தல் வேண்டும் என்கின்றார்.

இந்த ஒரு பாடலிலேயே நூல் பற்றிய இலக்கணத்தைத் தொகுப்பாய் நமக்கு வழங்கி அதை எளிதில் மறவா வண்ணம் கணிதத்தையும் உட்புகுத்தித் தான் "இதைப் பற்றித் தான் அடுத்ததாக விரிவாகச் சொல்லப் போகின்றேன்." என எடுத்தியம்புகின்றார். இதைப் பற்றி நாமும் விரிவாக உத்திகளைக் கற்கும் போது விரித்துரைக்கலாம்.

இப்போது இந்த நூல் இலக்கணத்தில் வரும் எண்ணிக்கைகளைக் காண்போம்.

நூல் ஒன்று	=	1
பாயிரங்கள் இரண்டு	=	2 (சிறப்புப் பாயிரம், பொதுப்பாயிரம்)
வகைகள் மூன்று	=	3
பயன்கள் நான்கு	=	4
மதங்கள் ஏழு	=	7
குற்றங்கள் பத்து	=	10
அழகுகள் பத்து	=	10
உத்திகள்	=	32
படலங்கள் இரண்டு	=	2
சூத்திரம் ஒன்று	=	1
உரைகள் இரண்டு	=	2 (காண்டிகை விருத்தி)

ஆக மொத்தம் 74 பண்புகளையும் கொண்டு விளங்குவது தான் நூல்! இவற்றில் நாம் எழுதக் கூடிய கட்டுரை/தேர்வு, கொடுக்கப்பட்டிருக்கும் கால அளவு, கிடைக்கும் மதிப்பெண்கள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு பல வழிகளை நாம் பின்பற்ற முடியும். ஏதோ நினைவில் வந்ததையெல்லாம் எழுதி வைக்காமல் இலக்கணத்தின் வழி நடக்கும் போது வாசிப்பவர்களின் மனதில் பதிந்து ஆசிரியர் காட்டிய நான்கு பயன்களும் நிச்சயம் கிடைக்கும்.

நூலுக்கு நூல் என்று பெயர் வரக்காரணம் என்ன என்று சுவையாக விளக்குகின்றார் பவணந்தி முனிவர். அந்தப் பாடலைக் காண்போம்.

பஞ்சி தன் சொல் ஆ பனுவல் இழை ஆக

செம் சொல் புலவன் ஏ சேயிழை ஆ - எஞ்சாத

கை ஏ வாய் ஆக கதிர் ஏ மதி ஆக

மை இலா நூல் முடியும் ஆறு

உரை:

நூலை எழுதுபவனின் சொற்களே பஞ்சாகவும், அழகான பாடல் வரிகளே இழைகளாகவும், செம்மையாகச் சொல்லும் புலவனே நூற்கும் அழகான பெண்ணாகவும், குறைவில்லாத வாயே கையாகவும், அறிவே நூற்கும் கதிராகவும் ஆகிக் குற்றமில்லா ஒரு நூல் உருவாக முடியும்.

சொல்	-	பஞ்சு
பனுவல் (பாடல்/செய்யுள்)	-	இழை
புலவன்	-	நூற்கும் பெண்
பாடும் வாய்	-	பெண்ணின் கை
அறிவு	-	நூற்கும் கதிர்*
நூல்	-	நூல்

***நூற்புக் கதிர்:** நுனியில் கூம்பிச் செல்லும் கழிசுற்று நூற்கோல் (Spindle) தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நூற்புக் கதிர் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால் நூல் நூற்கும் அறிவியலில் நாம் எவ்வளவு சிறந்து விளங்கியிருக்கின்றோம் என்றும் தெரியவருகின்றது.

தனித்தனியாகப் பஞ்சாக இருக்கும் சொற்கள் புலவனின் பாடும் வாயால் அறிவெனும் கருவி கொண்டு செய்யுள் எனும் இழைகளால் நூற்கப்படுகின்றது என்று படம் போட்டுக் கண்முன் நிறுத்தும் அழகு அருமை அல்லவா?

எவ்வாறு கற்கும் நூலுக்கு, நூற்கும் பஞ்சு நூலுடன் இணைத்து உவமையாகு பெயராகப் பயன்படுத்தப்படுகின்றது என்று ஆறு பொருத்தங்களையும் இணைத்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.

நூலின் பெருமையைச் சொல்ல விளையும் பாடல் இஃது.

உரத்தின் வளம் பெருக்கி உள்ளிய தீமை

புரத்தின் வளம் முருக்கி பொல்லா - மரத்தின்

கன கோட்டம் தீர்க்கும் நூல் அஃது ஏ போல் மாந்தர்

மன கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு

உரை:

உடலில் அறிவு வளத்தினைப் பெருக்கி அதன் உள்ளிருக்கும் அறியாமை எனும் வளரும் தீமையை முறியடித்து, இயற்கையாகக் கோணல் மாணலாக வளரும் பொல்லா மரத்தின் கோணலை

(கனகோட்டம்) நீக்குவது தச்சர்கள் பயன்படுத்தும் எற்றுநூலாகும்*. அதைப் போலவே கற்போரின் மனக்கோணல்களைத் தீர்ப்பதே நூலின் பெருமை ஆகும். அறியாமையையும் வளம் என்று குறிப்பிடுவதை நோக்கவும்! அறிவு வளம் பெறுவது போலவே அதனுடன் அறியாமையும் வளரும் தன்மை கொண்டது. அதைச் சரியாக்க வல்லது சிறந்த நூல்.

ஒரு நூலானது மக்களின் மனத்தினைச் செம்மைப் படுத்துவதாக இருத்தல் வேண்டும் என்ற நோக்கம் இதன்மூலம் வெளிப்படுகின்றது.

ஆசிரியர் எவ்வாறு நூல் என்னும் ஒரு சொல்லை விரித்துக் காட்ட அழகான எடுத்துக்காட்டுகளை முன்னிறுத்தி விளக்குகின்றார் என்பதைக் கவனியுங்கள்!

*எற்றுநூல் - மரம் அறுக்க அடையாளம் காட்டும் நூல்.

ஏற்கனவே பொதுப்பாயிரம் மற்றும் சிறப்புப்பாயிரம் குறித்த இரண்டையும் விளக்கியதால் இனி நூலின் மூன்று வகைகளைக் குறித்துக் காண்போம்.

"முதல் வழி சார்பு என நூல் மூன்று ஆகும்"

நூல் முதல்நூல், வழிநூல், சார்பு நூல் என்று மூன்று வகையாகும்.

அவற்று உள்

வினை இன் நீங்கி விளங்கிய அறிவின்

முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்

உரை:

மூன்று நூல் வகைகளுள் முதன்மையானது முதல் நூல்.

ஒன்றைக் குறித்து இவ்வுலகிலேயே புதுமையாக முதன்முதலாகக் கண்டறியும் முனைவன் அவனது சொற்களிலே எடுத்தியம்பும் நூல் முதல்நூல் ஆகும். நல்வினை தீவினை ஆகிய இரண்டும் நீங்கிய அறிவின் முனைவன் என்று இறைவனுக்கு ஒப்பாக முதல்நூலின் நூலாசிரியரைக் குறிப்பிடுகின்றார் பவணந்தி.

முதல்நூலுக்கு எடுத்துக்காட்டாக தமிழில் அகத்தியரின் அகத்தியம், ஐன்ஸ்டீனின் பொதுச்சார்புக் கொள்கை குறித்த அவரது கட்டுரைகள் ஆகியவற்றைச் சொல்லலாம்.

முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்து

பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி

அழியா மரபினது வழிநூல் ஆகும்

முதல் நூலினை அப்படியே பின்பற்றி அவற்றில் இன்றியமையாத வேண்டிய மாற்றங்களை (வேண்டும் விகற்பம்) மட்டும் பின்னாளில் ஒருவர் செய்து அழியாத மரபின் வழி நிற்பது வழிநூல் ஆகும்.

எடுத்துக்காட்டாக நமது இந்தக் கட்டுரையையே எடுத்துக் கொள்ளலாம். அகத்தியத்தின் வழி தொல்காப்பியம். அதே போல் நன்னூலின் வழி இக்கட்டுரை.

இருவர் நூல் கு உம் ஒரு சிறை தொடங்கி

திரிபு வேறு உடையது புடைநூல் ஆகும்

முதல்நூல் மற்றும் வழிநூல் ஆகியவற்றுடன் ஓரளவு உடன்பட்டு பெருமளவு மாறுபட்டு (திரிபு வேறு உடையது) நிற்பது புடைநூல் எனப்படும் சார்பு நூல் ஆகும்.

எடுத்துக்காட்டாக நன்னூலைச் சொல்லலாம். காலத்துக்குத் தகுந்தவாறு மாற்றியமைத்து நன்னூலை வழங்கியுள்ளார் ஆசிரியர்.

இனி வழிநூல் மற்றும் சார்பு நூல் ஆகிய இரண்டுக்கும் பொதுவான விதியையும் கூறுகின்றார் பவணந்தி முனிவர்.

முன்னோர் மொழி பொருள் ஏ அன்றி அவர் மொழி உம்

பொன் ஏ போல் போற்றுவம் என்பதன் உம் - முன்னோர் இன்

வேறு நூல் செய்தும் எனும் மேற்கோள் இல் என்பதன் கு உம்

கூறு பழம் சூத்திரத்தின் கோள்

வழிநூல் மற்றும் சார்பு நூல் ஆசிரியர்கள் புதிதாக எதையும் சொல்லிவிட வில்லை. முதல்நூலில் சில/பல மாற்றங்களை மட்டுமே செய்வதால், முன்னோர் (முதல்நூல் எழுதியோர்) நூலின் பொருளை மட்டுமின்றி அவர்தம் மொழியையும் பொன்னே போல் போற்றி அந்த நூலின் பகுதிகளைத் தேவையான இடத்தில் மேற்கோளாகத் தனது நூலில் காட்டுவோம் என்று பொதுவான விதியை முன்வைக்கின்றார்.

நன்னூலில் தொல்காப்பியத்தின் வரிகளை அப்படியே மேற்கோள் காட்டி தனது நூலில் சிறப்பும் செய்திருக்கின்றார் ஆசிரியர்.

(தொடரும்)

பயனும் மதமும்

ஒரு நூல், இரு பாயிரங்கள், மூன்று வகைகள் என்று வரிசைப்படுத்திக் கொண்டே வந்த ஆசிரியர், அடுத்ததாக எண்ணிக்கையில் நான்கு என்று மொழிவது நூலினால் விளையும் பயன்களாகும்.

அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூல் பயனே!

அறம், பொருள், இன்பம், வீடு என்று தொன்று தொட்டு நம்மால் கூறப்படுவதும், தர்ம, அர்த்த, காம, மோக்ஷ என்று வடமொழியில் சொல்லப்படுவதுமான நான்கு பயன்களும் அடையும் வகையில் ஒரு நூல் இருத்தல் வேண்டும் என்கின்றார் பவணந்தியார்.

அறுப்பதால் அறம். அறத்தின் ஊற்று அன்பு. இதை வள்ளுவர் சுட்டிக் காட்ட விளைகையில் எலும்பில்லா உயிரினங்களை வெயில் எவ்வாறு காயுமோ அது போல் அன்பில்லாதவரை அறம் காயும் என்றார்.

என்பி லதனை வெயில் போற்காயுமே

அன்பி லதனை அறம்.

ஆக, அன்பின் பயனாக அறமே விளைவதால் அன்பு வழியைக் காட்டுவதாக ஒரு நூல் அமைதல் அவசியமாகின்றது.

பொருள் எனும் சொல்லுக்குச் செல்வம் என்றும் சொல்லுக்கான பொருள் என்றும் பொருட்கள் உண்டென்பதை அறிவோம் தானே? தனது சொந்தத் திறமையால் தீதின்றி வந்த பொருளால் அப்பொருள் மட்டுமின்றி, அறம், பொருள், இன்பம் என்று ஒரே கல்லில் மூன்று மாங்கனிகள் விழ வைக்கலாம் என்பதும் வள்ளுவர் வாக்கு.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து

தீதின்றி வந்த பொருள்.

இதையே "செய்யும் தொழிலே தெய்வம் அதில் திறமை தான் நமது செல்வம்" எனும் தற்காலப் பாடல் வரியும் உணர்த்துகின்றது! அத்தகைய பொருளைச் செய்யும் வகையைக் காட்டித் திறமையை வளர்ப்பதற்கு ஒரு நூலானது உதவ வேண்டும்.

இன்பத்துக்கான விளக்கம் சொல்லவும் வேண்டுமோ? ஒரு நல்ல நூலுக்கான இலக்கணமாக ஆங்கிலத்தில் கூட, "That is a good book which is opened with expectation and closed with satisfaction." என்று குறிப்பிடுவார்கள் அல்லவா? எந்த ஒரு நூலானது வாசிக்க வாசிக்கத் திகட்டாமல், யோசிக்கவும் வைத்து இன்பக் கடலில் திளைக்க வைக்கின்றதோ அன்னூல் ஒரு நன்னூல் என்பதில் ஐயமுமுண்டோ? எடுத்துக்காட்டாக பொன்னியின் செல்வன் நூலை வாசித்தவர்களுக்குக் கிட்டும் இன்பம் அவரவர்களே அறிவர்.

அடுத்ததாக வீடு. முதநிலை திரிந்த தொழிற்பெயர். விடுவதால் வீடு. வினைச் சொற்கள் பெயர்ச்சொற்களாக மாறும் போது முதல் எழுத்து திரிந்து நீண்டு விடுதலை இவ்வாறு அழைக்கின்றோம். எடுத்துக்காட்டாக, கெடு - கேடு, படு-பாடு.

இன்பத்தால் விளைவது துன்பம் என்று உணர்ந்து, இரும்பாக இருப்பினும், தங்கமாக இருப்பினும் சங்கிலி சங்கிலி தானே என்று தெளிந்து தளைகளைக் கட்டறுத்து விடுபடுவதால் அது வீடு என்று அழைக்கப்படுகின்றது.

இதையே நம் ஓவை நான்கே வரிகளில்,

ஈதலறம் தீவினைவிட் டீட்டுபொருள் எஞ்சான்றும்

காதல் இருவர் கருத்தொருமித்(து) ரீ ஆதரவு

பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்

விட்டதே பேரின்ப வீடு.

என்று குறிப்பிட்டாள்.

அத்தகைய நான்கு பயன்களும் உடைத்ததே நூலுக்குப் பயன் என்று நம் ஆசிரியரும் குறிக்கின்றார். நாம் எதை எழுத்தில் வடித்தாலும் அதில் இவ்வகைப் பயன்களில் ஏதேனும் ஒன்றிரண்டாயினும் உள்ளதா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்தல் நமக்கு மட்டுமின்றிப் படிப்போருக்கும் பயன் விளைவிக்கும். வள்ளுவரும் இதையே,

நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்

பயனில சொல்லாமை நன்று

என்றார்!

அடுத்ததாக ஏழுவகை மதங்களைப் பட்டியலிடுகின்றார் ஆசிரியர். மதங்களின் பெயரால் இன்று மதம் பிடித்து அலையும் மனிதர்கள் மனத்திலுள்ள மதங்கள் அல்ல இவை.

ஒரு நூலின்கண் எழுதப்படும் கருத்துகளில் கருத் துகள் எது? கருத்து மற்றும் களை எது என்று ஆய்ந்து வாசகர் மெய்ப்பொருள் காண உந்தும் வகையில் ஏழ் வகைக் கொள்கையுடன் இருத்தல் அவசியம் என்கின்றார். அதென்ன ஏழ்வகை மதங்கள்? வாருங்கள் காண்போம்.

எழு வகை மதமே உடன்படல் மறுத்தல்

பிறர் தம் மதம் மேற்கொண்டு களைவே

தாஅன் நாட்டித் தனாது நிறுப்பே

இருவர் மாறுகோள் ஒரு தலை துணிவே

பிறர் நூல் குற்றம் காட்டல் ஏனை

பிறிதொடு படாஅன் தன் மதம் கொளலே

1. உடன்படல்: முன்னோர்கள் கருத்துடன் ஒத்துச் செல்வதற்கு உடன்படுதல்
2. மறுத்தல்: காலத்தால் மாற்றமுற்ற கருத்துகளை மறுத்தல்
3. பிறரது கொள்கை மேற்கொண்டு பின் அவற்றில் காணப்பெறும் ஒவ்வாததை மறுத்துக் களைதல்
4. தான் ஒரு கொள்கையைக் கூறி இறுதிவரை நிலைநாட்டி அதைப் படிப்போர் உள்ளத்தில் நிறுத்த வைத்தல்
5. மாறுபடுவோர் இருவரது கருத்தையும் விவாதத்தில் வைத்து அதில் ஒருபக்கமாகத் துணிந்து முடிவெடித்தல்.

6. பிறர் நூலில் காணப்படும் குற்றங்களை எடுத்துரைத்தல்
7. பிறருடைய கொள்கைக்கு உடன்படாமல் தன் கொள்கையையே கொள்ளுதல்

இக்கொள்கைகளைக் காண்கையில் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பது போலத் தோன்றும். ஆனால் உண்மையில் அவ்வாறல்ல. ஒரு நூலாசிரியர் என்பவர் தமது நூலில் என்னென்ன சொல்லலாம் என்று உலகெங்கும் காண்கையில் மேற்கண்ட ஏழு வித மதங்களையும் நிச்சயம் காண்பார். பலவித விவாதங்களுக்குப் பின்னர் தமது கொள்கையை ஆணித்தரமாக நிலைநாட்டுவார்.

இவ்வேழு கொள்கைகளையும் கொண்டு திறந்த மனப்பான்மையுடன் பலரது கருத்துகளை ஏற்றும், விலக்கியும், பகுத்தும், வகுத்தும், தொகுத்தும் வழங்கப்படும் நூலானது படிப்போருக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்குமல்லவா?

ஒரு கருத்தை எவ்வாறு அணுக வேண்டும் என்று மாணவர்களுக்கு நல்லதோர் ஆசானாக விளக்கித் தமது எழுத்தின் பயனாக என்னென்ன விளையவும் வேண்டும் என்று பாரத சித்தாந்தமான அறம், பொருள், இன்பம் வீட்டையும் காட்டும் சிகரமாக நன்னூலின் இந்தப் பகுதி இருக்கின்றது.

குற்றங்கள்

உலகத்தார் அனைவரும் படித்துப் பயனுறவும், கல்வி கற்கவும், எழுதியவர் இல்லாது போனாலும் தான் நின்று என்றும் அவர் பெயர் சொல்லும் ஒரு நூலானது எவ்வாறெல்லாம் விளங்க வேண்டும் என்று எண்களால் பட்டியிலிடும் ஆசிரியர் அடுத்ததாக பத்துக் குற்றங்களைச் சிறப்புற உரைக்கின்றார்.

நூலை எழுதும் ஆசிரியர்கள் இக்குற்றங்களைக் கருத்தில் கொண்டு அவை இடம் பெறாத வண்ணம் நூலை வடிக்கும் போது இயல்பான அழகும் தெளிவான நடையும் மிளிறும். இக்குற்றங்களின் பட்டியல் தற்கால மாணவர்களுக்கு கிடைத்தற்கரிய மருந்தாகும். தேர்வில் இவற்றை நீக்கி விட்டு அடுத்த பகுதியில் வரப்போகும் பத்து அழகுகளையும் நேர்த்தியாகச் சேர்த்து எழுதினால் மதிப்பெண்களை அள்ளிக் குவிக்கலாம்.

இப்போது ஆசிரியர் குறிப்பிடும் பத்துக் குற்றங்களின் பட்டியலைக் காண்போம்.

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்

கூறியது கூறல் மாறுகொளக் கூறல்

வழூஉச்சொல் புணர்த்தல் மயங்க வைத்தல்

வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்

சென்று தேய்ந்து இறுதல் நின்று பயன் இன்மை

என்றிவை ஈர் ஐங் குற்றம் நூற்கே

இனி ஒவ்வொரு குற்றத்தைப் பற்றியும் விளக்கமாகக் காண்போம்.

1. குன்றக் கூறல்:

தாம் எழுத வேண்டிய அளவிலிருந்தும் பொருளிலிருந்தும் குறைவு ஏற்படும் படியாகக் கூறுதல் முதற்குற்றமாகும்.

தேர்வுகளில் 5 மதிப்பெண்கள் கொண்ட கேள்விக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிப்பதை இங்கே குறிப்பிடலாம். இது மாணவர் தான் சரியாகப் படிக்கவில்லை என்பதை திருத்துபவருக்குத் தாமே எடுத்துக் காட்டுவது போல் இருக்கின்றது அல்லவா?

2. மிகைபடக் கூறல்

ஆசிரியர் குறைவு படாமல் தானே எழுத வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார் என்று பக்கம் பக்கமாகத் தேவையில்லாத அளவுக்கு அதிகமாகக் கூறுதலும் குற்றமாகும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம் எனும் பழமொழியினை நினைவு கூறுதல் நலம். மேலும், தேர்வு எழுதும் போது தேவைக்கு அதிகமாக ஒரு வினாவுக்குப் பதிலளிக்கும் போது மற்றொரு வினாவுக்கான நேரத்தை வீணடிப்பதற்கும் ஏதுவாகி விடும்.

3. கூறியது கூறல்

ஏற்கனவே தாம் கூறிய கருத்தை வேறு சொற்களிலோ அல்லது திரும்பவும் வேறொரு இடத்திலோ கூறுவது நூலினை வாசிப்பவருக்கு ஆயாசத்தை அளிக்கும். எனவே கிளிப்பிள்ளை போலச் சொன்னதையே மீண்டும் கூறுவதும் குற்றமாகும். அவ்வாறு முன்பு குறிப்பிட்டு விளக்கிய

ஒரு பகுதியை மீண்டும் குறிப்பிட வேண்டுமாயின் எவ்வாறு அதை நாசூக்காகக் குறிப்பிட வேண்டும் என்பதை உத்திகளின் போது காண்போம்.

4. மாறுகொளக் கூறல்

எழுதி இத்தனை ஆண்டுகள் ஆன போதும் மாறாமல் பொருள் தந்து கொண்டிருக்கும் இச்சொற்களுக்கு விளக்கவுரையும் தேவையில்லை! ஓரிடத்தில் ஒன்றை நாமே உடன்பட்டுக் கூறிவிட்டு மீண்டும் அதை மாற்றி இன்னோரிடத்தில் உரைப்பது தாமும் குழம்பி, வாசிப்பவரையும் குழப்பி நகைப்புக்குரியதாக்கிவிடும். எனவே தாம் கூறியது தாமே மாறுகொள்ளுமாறு கூறலும் குற்றமாம்.

5. வழுஉச்சொல் புணர்த்தல்

நாம் எழுதும் எண்ணங்களின் எழுத்து வடிவே சொற்களாக விளங்குவதால் சொற்களைக் கையாளும் போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும் என்பதை இங்கே குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

சரியான சொற்களைப் பயன்படுத்தும் போதே அதைத் தவறான பொருள் கொள்வோர் பலர் இருக்கும் வேளையில் தவறான சொற்களைப் பயன்படுத்தினால் எழுதியவரின் எண்ணத்தில் உதித்த கருத்து திசை மாறிப் புரிந்து கொள்ளப்படும் என்பதால் குற்றமுள்ள, தவறான (வழு) சொற்களைப் பயன்படுத்தலும் ஒரு குற்றமாகும். அவ்வாறு சொற்களைப் பயன்படுத்துகையில் அதன் அருகில் இருபுறமும் வரும் சொற்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். புணர்த்தல் என்ற சொல்லின் மூலம் சேர்த்தல் என்பதையும் ஆசிரியர் குறிக்கின்றார்.

6. மயங்க வைத்தல்:

"**ஏவா மக்கள் மூவா மருந்து**" என்பது ஔவை வாக்கு. தமது தாய் தந்தையர் என்ன சொல்லப் போகின்றார்கள் என்பதைக் குறிப்பால் அறிந்து அவர்கள் சொல்வதற்கு முன்னரே எள்ளென்பதற்குள் எண்ணெய்யாய் விளங்கும் மக்கட்பேறு கொண்டவர்கள் மூப்பினைப் போக்கவல்ல அமிர்தம் போன்ற மருந்தாவார்கள் என்று கொன்றை வேந்தனில் ஔவை குறிப்பிடுகின்றாள்.

ஆனால், வாசிப்பவர்களின் அறிவு எவ்வாறிருக்கும் என்ற குறிப்பினை அறிந்து கொள்ளாமல், எழுதியவர் இதைப் பற்றிக் குறிப்பிடுகின்றாரோ அல்லது அதைப் பற்றிக் குறிப்பிடுகின்றாரோ என்று மயங்கும் வண்ணம் எழுதி வைத்தலும் குற்றமாகும். தற்போது குறிப்பிடுவதாயின் 'வழவழ கொழகொழ' என்று எழுதுவதைச் சுட்டலாம்.

இப்போது மேலே குறிப்பிட்ட இரு பத்திகளையும் வாசிப்பவருக்கு நான் என்னதான் சொல்ல வருகின்றேன் என்பது புரியாமல் மயங்க வைக்கின்றது அல்லவா? அதைத் தான் மயங்க வைத்தல் என்கின்றார் நம் ஆசிரியர்!

7. வெற்றெனத் தொடுத்தல்:

தாம் சொல்ல வந்த பொருளோடு பொருந்தாமல் வெறும் அலங்காரச் சொற்களைக் கொண்டு அடுக்கிக் கூறுதலை இங்கே வெற்றெனத் தொடுத்தல் என்று குறிப்பிடுகின்றார் ஆசிரியர். மிகைபடக் கூறுதற்கும், வெற்றெனத் தொடுத்தலுக்கும் இருக்கும் வித்தியாசத்தை நாம் உணர்தல் வேண்டும்.

ஒரு சொல்லில் சொல்ல வேண்டியதை இரு சொற்களில் சொல்லாமல் இருப்பது நன்று அல்லவா? சில சொற்களால் ஒரு பொருளை விளக்க முடியாதவர்களே அதைப் பல சொற்களில் விளக்க முற்படுவார்கள். வாசிப்பவர்களின் நேரத்தையும் வீணடிப்பார்கள்.

பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற

சிலசொல்லல் தேற்றா தவர்

தெளிவாகக் (மன்ற) குற்றமற்ற சில சொற்களால் தேற்ற இயலாதவர்களே பல சொற்களைச் சொல்வதற்கு விருப்பமானவர்களாக இருப்பர் என்று சொல்வன்மையில் வள்ளுவப்பெருந்தகை குறிப்பிடுவதும் இதையே!

எங்களுக்கு முதல் பத்தியிலேயே புரிந்து விட்டது என்பவர்கள் வெற்றெனத் தொடுத்தலுக்கான எடுத்துக்காட்டாகவும் அடுத்தடுத்த விளக்கங்களை கொள்ளலாம்!

8. மற்றொன்று விரித்தல்

சொல்ல வந்த கருத்தினை விடுத்து மற்றொன்றைப் பற்றி விளக்க ஆரம்பிப்பதை அழகாகக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

பசுவைப் பற்றிய வினாவினை நன்றாகக் கற்று வந்த ஒரு மாணவருக்கு மரத்தைப் பற்றிய வினா தேர்வில் கேட்கப்பட்டதாம். அவரும் சற்றும் சளைக்காமல் மரம் என்ற தலைப்பிட்டு, உள்ளே பசுவைப் பற்றித் தாம் கற்ற அனைத்தையும் எழுதி விட்டு, அந்தப் பசுவானது ஒரு மரத்தில் கட்டப்பட்டு உள்ளது என்று எழுதி நிறைவு செய்தாராம்! இவ்வாறெல்லாம் பிற்கால மாணவர்கள் செய்வார்கள் என்று முற்காலமே உணர்ந்து தான் மற்றொன்று விரித்தலும் குற்றம் என்றார் பவணந்தியார்.

9. சென்று தேய்ந்து இறுதல்

ஆரம்பத்தில் மிகச் சிறப்பாக எழுத ஆரம்பித்துப் பின்னர் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக இறுதியில் சொல்லும் கிடைக்காமல் பொருளும் கிடைக்காமல் கருத்து தன்னளவில் தேய்ந்து விடுதலைச் சென்று தேய்ந்து இற்றுப் போதல் எனும் குற்றமாகக் காட்டுகின்றார் ஆசிரியர்.

10. நின்று பயனின்மை:

முத்தாய்ப்பாகப் பத்தாவதாகக் கூறப்பட்டிருக்கும் இக்குறைக்குப் பலவிதமாகப் பொருள் கொள்ளலாம். சொற்கள் மட்டும் நின்று பொருளெனும் பயனில்லாதிருத்தல் குற்றமாகும்.

ஒரு நூலை வாசித்து முடித்த பின்னர் அதனால் கிடைக்க வேண்டிய பயனில்லாதிருத்தலும் (ஒரு நூலின் நான்கு வகைப் பயன்களையும் இங்கே கருத்தில் கொள்க) ஒரு குற்றமாகும்.

நீங்கள் ஒரு மாணவராக இருப்பின், உங்கள் விடைத்தாளைத் திருத்தி முடித்த பின்னரும் அடடா! இந்த மாணவர் எவ்வளவு அழகாகப் பதிலளித்திருக்கின்றார் என்று அதன் தாக்கம் ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும்! அவ்வாறு மனதில் நிற்கும் பயனில்லாது எழுதுதல் குற்றமாகும் என்றும் அடியேன் பொருள் கொள்கின்றேன்.

இறுதியடியில் "என்றிவை ஈரைங் குற்றம் நூற்கே" என்று முடிக்கும் போது கூட ஈரைந்து பத்து என்று ஒரு கணித வாய்ப்பாட்டை மாணவர்களுக்குச் சொல்லி முடித்திருக்கும் பாங்கு அழகு!

எழுதும் போது நாம் நீக்க வேண்டுவன எவையெவை என்று தெளிவுற இதைக் காட்டிலும் வேறு என்ன மருந்து வேண்டும் நமக்கு? நம்மிடம் உள்ள பொக்கிசமாம் நன்னூலைப் போற்றிப் பத்துக் குற்றங்களையும் நீக்கி எழுதப் பயில்வோம்.

அழகுகள்:

ஒரு நூலில் தவிர்க்கப்படவேண்டியவை எவை என்று சென்ற பகுதியில் கண்டோம். அப்படியானால் அவைகளைத் தவிர்த்து விட்டால் போதுமா? நூல் சிறப்பாகி விடுமா என்று கேட்டால் அது தான் இல்லை. ஒரு கல்லில் சிற்பியானவர் செதுக்கும் போது அல்லவற்றை நீக்குவது மட்டுமின்றி அச்சிலையை மேற்கொண்டு அழகுபடுத்தவும் செய்கின்றார் அல்லவா? அது போல நூலுக்கு அழகூட்டுவதாக சில அம்சங்கள் இருக்கின்றன என்று அவற்றையும் பட்டியலிடுகின்றார் பவணந்தியார்.

குற்றங்கள் பத்து இருந்தது போலவே அழகுகளும் பத்து இருக்கின்றன. இப்பத்து அழகுகளையும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் பொருந்துமாறு செய்தோமானால் நூல் அழகுற அமையும் என்பதில் ஐயமில்லை. இவற்றில் சில அழகுகள் குற்றங்களின் நேர் எதிராக இருப்பதைக் கண்ணுறலாம். இனி அழகுகளைக் காண்போமா?

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நல் மொழி புணர்த்தல்
ஓசை உடைமை ஆழம் உடைத்து ஆதல்
முறையின் வைப்பு ஏ உலகம் மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது
ஆகுதல் நூலின் கு அழகு எனும் பத்து ஏ

1. சுருங்கச் சொல்லல்:

குறைவான சொற்களைக் கொண்டே நிறைவான பொருளைத் தருவது என்பது ஒரு கலை. திருவள்ளுவரின் திருக்குறளைக் கண்டோமேயானால் ஏழே சொற்களில் எத்தனை சிறந்த கருத்துகளை உலகோருக்குச் சொல்லி வைத்துச் சென்றிருக்கின்றார் என்பது புரியும். "**அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்**" என ஔவை சொன்னதை நினைவு கூர்வோம்.

ஒரு பொருளை ஐந்து சொற்களிலும் சொல்லலாம், பத்து சொற்களிலும் சொல்லலாம் என்றிருந்தால் ஐந்து சொற்களில் சொல்வதே நலம். எழுதுபவருக்கும் அதை வாசிப்பவருக்கும் இடம், பொருள், காலம் மிச்சமாகின்றது.

இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். குற்றங்களில் முதல் குற்றமாக ஆசிரியர் குறிப்பிடுவது "**குன்றக் கூறல்**" அழகுகளில் முதன்மையாகக் குறிப்பிடுவது "**சுருங்கச் சொல்லல்**" இரண்டுக்கும் இருக்கும் வித்தியாசத்தை நாம் உணர்தல் அவசியமாகும். பொருள் குன்றக் கூறுவது குற்றமாகும். அதே சமயத்தில் சொல்ல வந்ததை நறுக்குத் தெறித்தாற் போல் சொல்லுதல் சுருங்கச் சொல்லல் ஆகும்.

2. விளங்க வைத்தல்:

ஒரு நூலை வாசிக்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அது என்ன சொல்கின்றது என்பதை அதன் ஆசிரியர் விளக்க வேண்டுமா அல்லது வாசிப்பவராகிய நீங்கள் முயற்சி செய்து விளங்கிக் கொள்ள வேண்டுமா? எனும் கேள்விக்கு எத்துணை சாதுரியமாகப் பதில் அளிக்கின்றார் பாருங்கள்!

வாசிப்பவர் தாமே வாசித்துப் பின் யோசித்து பொருளை விளங்கிக் கொள்வதில் இல்லை அழகு! இருளைத் துரத்துவதற்கு என்று தனியே மெனக்கெடாமல் எவ்வாறு ஒரு விளக்கை ஏற்றி வைத்தால் இருள் தூர ஓடி விடுகின்றதோ அதே போல வாசிப்பவர் இயல்பாகவே விளங்கிக் கொள்ளுமாறு படைத்தலே ஆசிரியருக்கு அழகு என்று இங்கே குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

3. நவின்றோர்க்கு இனிமை:

எழுத்துக்களின் கோர்வை சொற்கள். சொற்களின் கோர்வை வாக்கியங்கள். அவ்வாறு கோர்க்கும் போது மாலை தொடுத்தாற் போல் நேர்த்தியுறக் கோர்த்தால் தானே மாலைக்கு அழகாக

இருக்கும்? சொற்களை மனதுக்குள் நினைக்குந் தோறும் வெளியே சொல்லுந் தோறும் தித்திக்கும் வகையில் இனிமையாக இருந்தால் அதை விட வேறு என்ன அழகு வேண்டும்?

இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந்தற்று. எனும் நூறாவது குறட்பாவை நினைத்துக் களிப்போம். எனவே எதைச் சொல்வதாயிருந்தாலும் அதை இனிமையாகச் சொல்வதற்குக் கற்போம்.

4. நல்மொழி புணர்த்தல்:

எப்போதும் நல்லதைச் சேர்த்து அல்லதை விடுத்து நேர்மறையான எண்ணங்களை உலவவிடுதல் ஒரு நூலுக்கு அழகு சேர்க்கும் அம்சமாகும். வாசிப்பவர்களின் மனதில் எதிர்மறையான எண்ணங்களை விதைப்பதால் என்ன பயன்? இதைச் செய்ய வேண்டாம் என்று சொல்வதை விட, எதைச் செய்ய வேண்டும் என்று கூறும் நூல் சிறந்ததன்றோ!

5. ஓசை உடைமை:

எண்ணத்தினின்று எழுவதால் எழுத்து, நாவையும் மனத்தையும் இசைந்து அசையச் செய்வதால் அசை, தாமே சீரமைந்து எண்ணங்களைச் சீர் படுத்துவதால் சீர், அடுத்தடுத்த சொற்களைத் தாளிட்டு இனிமை தருதலால் தளை, பொருளெனும் இலக்கை நோக்கி அடியெடுத்து வைப்பதால் அடி, இவையனைத்தையும் மலராகத் தொடுக்கவே தொடை, தன்மை, உவமை, உருவகம், வஞ்சப் புகழ்ச்சி, வேற்றுமை என்று பலப்பல அணிகலன்களைப் பொருத்தி அழகு பார்ப்பதால் அணி என, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, அணி எனத் தமிழில் இருக்கும் இலக்கணங்கள் யாவும் செய்யுளுக்கு மட்டுமே என்று நினைத்து விடாதீர்கள்!

உரைநடைக்கும் இவற்றைப் பொருத்தினால் அழகு குறைவதில்லை. எதையும் ஓசை நயத்துடன் சொல்வது அழகுக்கு அழகூட்டும். மனதில் சட்டென்று பதியும். செல்வத்துள் செல்வம், நன்றி மறப்பது நன்றன்று போன்ற குறட்பாக்கள் நாம் மறக்க நினைத்தாலும் மறக்க முடியாததன் காரணம் யாது என்று நினைத்துப் பாருங்கள்.

6. ஆழம் உடைத்து ஆதல்:

இதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமா என்ன? ஒவ்வொரு முறை வாசிக்கும் தோறும் பொருளின் ஆழத்தைக் கண்டு வியக்கும் வண்ணம் எழுதுவதும் நேர்த்தியான ஒன்றாகும். சொல்ல வந்ததை முழுதும் சொல்ல வேண்டும் எனும் உட்குறிப்பு இதில் ஆழமாக உள்ளது.

7. முறையின் வைப்பே:

எதையும் சொல்லும் போது முறையாக வரிசைப்படுத்திச் சொல்லல் வேண்டும். அதை விடுத்து ஏனோ தானோவென்று சொல்வதால் வாசிப்பவர் குழம்பவே நேரிடும் அல்லவா? ஆகவே சொல்ல வருவதை முறையாக முன்னமே ஏதேனும் ஒரு வகையில் வரிசைப்படுத்தி அந்த வழியில் அழைத்துச் செல்லுதல் நன்மை பயக்கும். எடுத்துக்காட்டாக, சிறுகுழந்தைகளும் அறத்தையும் கூடவே தமிழையும் எளிதில் கற்பதற்கு ஏதுவாக இருக்கும் ஆத்திசூடியைக் குறிப்பிடலாம்.

இயல், இசை, நாடகம் என்றே முத்தமிழையும் மா, பலா, வாழை என்று முக்கனிகளையும் வரிசைப்படுத்துவது முறை. மாற்றி வரிசைப்படுத்தினால் அஃது அவ்வளவு அழகுபயக்குமா என்று சிந்தித்தல் வேண்டும்.

அதுமட்டுமின்றி ஓத்து, படலம், சூத்திரம் என்று இலக்கண முறைப்படி நூல் இருத்தல் வேண்டும் என்றும் ஆசிரியர் கூறுவதாகக் கொள்ளலாம்.

8. உலகம் மலையாமை:

நம்முடைய கலைவண்ணத்தை எல்லாம் காட்டி விடவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் இறங்காமல் சொல்ல வந்ததை எளிமையாகச் சொல்ல வேண்டும். அதைக் கண்டு உலகம் மலைத்து விடக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு எழுத வேண்டும்.

9. விழுமியது பயத்தல்:

இருப்பதில் சிறந்ததைச் சொல்ல வேண்டும் என்பதையே இது குறிக்கின்றது. வழுவுச்சொல் புணர்த்தல் எனும் குற்றத்திற்கு எதிர்மறையாக விழுமியது பயத்தல் எனும் இவ்வழகைக் குறிப்பிடலாம்.

10. விளங்கு உதாரணத்தது ஆதல்:

ஏற்கனவே குறிப்பிட்டது போல, நமது நூலை மூடி வைத்த பின்னும் நமது நூலானது மனதில் வட்டமிட்டு, அடுத்து குறிப்பிடும் போது நமது நூலைச் சான்றாகக் கொள்ளுமாறு எழுதுதலை முத்தாய்ப்பான அழகாகக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

எந்த மாணவரின் தேர்வுத் தாள், அதைத் திருத்திய உடன், “அடடா! இது போல் மற்ற மாணவர்களின் தேர்வுத்தாளும் இருந்தால் எப்படி இருக்கும்?” என்று ஆசிரியர் நினைத்துக் களிப்புறும் வண்ணம் இருக்கின்றதோ அந்த மாணவரின் எழுத்தே விளங்கு உதாரணத்து ஆதல் ஆகும். அதையே தனது லட்சியமாக ஒவ்வொரு மாணவரும் கொள்ள வேண்டும்.

இவையே நூலின் அழகுகள் பத்து என்று முடிக்கின்றார் ஆசிரியர்.

உத்திகள்: (Techniques)

ஒரு நூலில் நீக்கப்பட வேண்டிய பத்து குற்றங்களையும் சேர்க்கப்பட வேண்டிய பத்து அழகுகளையும் பாங்குறப் பட்டியலிட்ட பவணந்தியார் அந்நூல் சிறப்புற விளங்குவதற்கு என்னென்ன உத்திகளைக் கையாள வேண்டும் என்று அடுத்ததாகக் குறிப்பிடுகின்றார்.

எவ்வாறு ஒரு மனிதன் பேசும் சொல்லுக்குப் பல் முக்கியமோ அதே போல் நூலுக்கு உத்தி முக்கியமாகின்றது. இப்போது ஏன் பல்லைப் பற்றி குறிப்பிடுகின்றேன் என்று யோசிக்கின்றீர்கள் தானே? மனிதனுக்குப் பற்கள் 32 அல்லவா? அதே போல உத்திகளும் 32 உள்ளன! அடேங்கப்பா! 32 உத்திகளா என்று நீங்கள் கேட்கலாம். ஆம். முப்பத்தியிரண்டு உத்திகள் இருக்கின்றன என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இத்தனை உத்திகளையும் ஒருவர் பயிற்சி செய்து அதை நடைமுறைப்படுத்தி எழுதும் நூல் ஏன் நன்னூலாக இராது?

ஒரு நூலை எழுதும் உத்திகள் இவை தான் என்று எண்ணிக்கையில் சொல்லிவிட முடியாது. இருந்த போதும் அவற்றில் சிறந்தவற்றை உத்திகள் எனத் தொகுத்து வழங்கியிருக்கின்றார் ஆசிரியர் என்றும் இது தவிர இன்னும் பல உத்திகளை நன்னூலெங்கும் வாரித்தெளித்திருக்கின்றார் என்றும் சொல்வார் உளர்.

இத்தொடரை நான் எழுத ஆரம்பித்ததற்கு முக்கியமான காரணம் என்ன தெரியுமா? மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக விளங்கும் இந்த 32 உத்திகள் பற்றி அவர்கள் தெரிந்து கொண்டு எழுத ஆரம்பிக்க வேண்டும் என்ற எனது தீராத ஆவலே காரணமாகும். அவ்வாறு மாணவர்கள் பயிற்சி பெற்று நடைமுறைப்படுத்த ஆரம்பித்தால் தேர்வுகளில் எத்துணை சிறப்பாக அவர்களால் பரிமளிக்க முடியும் என்று இந்த உத்திகளைக் கற்றுக் கொண்டவுடன் அவர்களே உணர்வார்கள். இனி உத்திகளைக் காண்போமா? முதல் பத்து உத்திகளை இப்போது காண்போம்:

நுதலிப் புகுத லோத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டன் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்த றொடர்ச்சொற் புணர்த்தல்

1. நுதலிப் புகுதல்:

நுதல் என்ற சொல்லுக்கு நெற்றி எனும் பொருளுண்டு. "கண்ணுதலான் தன்கருணை" என்று மாணிக்க வாசகர் சிவனைக் குறிப்பிடும் போது நெற்றியில் கண்ணுள்ளவன் என்கின்றார் அல்லவா? முதல் உத்தியாக ஆசிரியர் ஏன் நெற்றியைக் குறிப்பிடுகின்றார்? புருவமத்தியின் மேலுள்ள விசாலமான பகுதியை நாம் நெற்றி என்று குறிப்பிடுகின்றோம். எதையும் கூர்ந்து நாம் கவனிக்கும் போது நமது எண்ணங்களின் குவியமாக நெற்றி இருப்பதை நம்மால் உணர முடியும். அது போல நாம் என்ன எழுதப் போகின்றோம் என்பதைக் குவியம் போலக் குவித்து உணர்ந்து அதன் பின் எழுதப் புக வேண்டும் என்பதற்கே ஆசிரியர் நெற்றியைக் குறிப்பிடுகின்றார்.

மாணவர்கள் ஒரு கேள்வியை எழுத முற்படும் போது அக்கேள்வியின் முழுப்பதிலையும் அதன் அமைப்பையும் மனக்கண்ணில் கொண்டு வந்து நிறுத்திவிட்டு அப்புறமாக எழுத ஆரம்பித்தால் சிறப்பாக இருக்கும். சரியான திட்டமிடலுடன் எழுத்து ஆரம்பமாகும்.

2. ஓத்து முறை வைப்பு

நன்னூல் ஒரு இலக்கண நூலென்பதை நாம் அறிவோம். அஃது மொழிக்கான இலக்கணம் மட்டுமின்றி ஒரு நூலுக்கான இலக்கணத்தையும் கொண்டு தாமே எடுத்துக்காட்டாய் விளங்குவதே அதன் சிறப்பு. ஓத்து, படலம், சூத்திரம், அதிகாரம் போன்ற இலக்கண முறைப்படி இருப்பது சிறப்பாக இருக்கும் என்பதையே ஓத்து முறை வைப்பு என்று குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

ஓத்து மற்றும் மற்ற பகுதிகளைப் பற்றி தொடரின் அடுத்த பகுதிகளில் சற்று விரிவாகக் காண்போம். இவ்விடத்தில் உத்தியாகக் கருதுமிடத்து, எதையும் எழுதும் போது அதன் முறையறிந்து வரிசைக்கிரமமாக எழுதுதல் என்பதை மட்டும் கருத்தில் கொள்வோம்.

ஏற்கனவே அழகுகளில் ஒன்றாக “முறையின் வைப்பே” என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதன் மூலம் முறைப்படி வைத்தலின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

3. தொகுத்துச் சுட்டல்

நாம் சொல்லவருவதை முதலிலேயே ஒரு தொகுப்பாக்கி அதன் குறிப்பை மட்டும் சொல்லிக் காட்டுதலே தொகுத்துச் சுட்டல் எனப்படும். தற்காலத்தில் ஆங்கிலத்தில் Synopsis என்றும் திரட்டு என்று தமிழிலும் சொல்கின்றோம் அல்லவா?

நீளவகைக் கேள்விகளில் முழுக் கேள்விக்கான பதிலையும் வாசித்துத் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாக அல்லாமல், முக்கியக் குறிப்புகளைத் தொகுத்து முதலிலேயே பட்டியலிட்டு விட்டால் தேர்வுத்தாளைத் திருத்துபவருக்கு மிகவும் எளிதாக இருக்கும்.

4. வகுத்துக் காட்டல்

மேலே குறிப்பிட்டது போல தொகுத்துச் சுட்டியதைப் பின்னர் ஒவ்வொன்றாக விரித்துக் காட்ட வேண்டும். அதையே வகுத்துக் காட்டல் என்கின்றார். தொகுத்தல் - சேர்த்தல், வகுத்தல் - கூறு போடுதல் என்ற பொருள்படும். முதலில் தொகுத்துச் சொல்லிவிட்டு அதன் பின் அதை வகுத்துக் காட்டினால் “உலகம் மலையாமை” எனும் அழகு நிச்சயம் கைகூடும்.

நன்னூலில் முதலிலேயே இத்தனை குற்றங்கள், அழகுகள், உத்திகள் என்று தொகுத்துக் காட்டிப் பின் அவற்றை ஒவ்வொன்றாய் வகுத்துக் காட்டி தாமே தமக்கு எடுத்துக்காட்டாய் விளங்குவதை என்னவென்று வியப்பது?

5. முடித்துக் காட்டல்

இங்கு முடித்தல் என்பது ஓரிடத்தில் முடிவாக்கி நிறுத்தி விடுதல் எனும் பொருளில் குறிப்பிடப்பட்டது அல்ல. பல மேலோர் கூறியதுடன் தான் கூறியிருப்பதை முடித்துப் போட்டுக் காட்டுதல் எனும் பொருள் உடையதாகும்.

6. முடிவிடம் கூறல்

தாம் சொல்லுவது எவ்விடத்தில் பயன்பாடுள்ளது அல்லது வழக்கில் உள்ளது என்று குறிப்பிட்டுக் கூறுதலையே “முடிவிடம் கூறல்” என்கின்றார் ஆசிரியர். எடுத்துக்காட்டாக ஒரு இலக்கணத்தைக் குறிப்பிட்டால் அது இலக்கியத்தில் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பதை முடிவிடம் எனலாம்.

கணிதத்தில் நிகழ்தகவு என்பதைப் பற்றி விளக்கினீர்களேயானால் அது எங்கேயெல்லாம் பயன்படுத்தப்படுகின்றது என்று குறிப்பிடுவதையே இவ்வுத்தி காட்டுகின்றது.

7. தானெடுத்து மொழிதல்

தன்னுடைய அறிவில் தோன்றுவதை எடுத்து முன்காட்டி வைப்பது அடுத்த உத்தி. யாரும் சொல்லியிராத விதமாகத் தமக்குத் தோன்றியிருப்பதை எடுத்து அதை மொழிதல் சிறப்புடையதன்றோ?

8. பிறன்கோள் கூறல்

பிறரது சொற்களில் சிறப்பாகக் கருதுவதை இடத்துக்குத் தகுந்தவாறு மேற்கோள் காட்டிக் கூறுதல் அடுத்த உத்தி. எடுத்துக்காட்டாக, திருக்குறள் போன்ற உலகப்பிரசித்தி பெற்ற நூற்களிலிருந்து மேற்கோள் காட்டுவது சிறப்பு.

மாணவர்கள் சட்டம் பற்றிய கேள்விகளில் பிரசித்தமான வழக்குகளை மேற்கோளிடுவது வழக்கம். அதற்கு அதிக மதிப்பெண்கள் கிடைக்கும் என்பது அனைவரும் அறிந்தது.

9. சொல்பொருள் விரித்தல்

நாம் குறிப்பிடும் சொல் சற்றுக் கடினமானதாகவோ அல்லது புதியதொரு சொல்லாகவோ இருந்தால் அதைப் பிரித்துப் பொருள் கூறல் நலம். சொல்ல வருகின்ற சொற்களின் பொருள் விளங்குமளவுக்கு விரித்துக் காட்டுதல் என்றும் உணர்ந்து கொள்ளலாம்.

தேவைப்படும் இடங்களிலெல்லாம் விளக்கமாகச் சொல்வது “விளங்கவைத்தல்” எனும் அழகு அமைவதற்குக் காரணமாக அமையும்.

10. தொடர்ச் சொல் புணர்த்தல்

ஒரு வாக்கியம் முடிந்தவுடன் அதற்கு அடுத்த வாக்கியமானது முந்தைய வாக்கியத்துடன் தொடர்புடையதாக இருந்தால் சிறப்பாக இருக்கும். சொல்வதை ஒரு மாலை போல் தொடுத்துக் கொண்டே செல்லும் போது மெய்யாகவே அது ஒரு மாலையைக் காணும் மகிழ்வை வாசிப்பவருக்குத் தந்து மணம் பரப்பும்.

முப்பத்தியிரண்டு உத்திகளின் தொடர்ச்சியாக அடுத்த பத்து உத்திகளை இப்போது காண்போம்.

இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந்து ஒழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன் மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்

11. இரட்டுற மொழிதல்:

ஒரு சொல் அல்லது வாக்கியத்துக்கு ஒரு பொருள் இருந்தாலே அது இனிமையானதாக இருக்கும். அதீதமாக அதற்கு இன்னொரு பொருளும் இருந்தால் இன்னும் இனியதாக இருக்கும். இரட்டுற மொழிதல் என்பது ஒரு சொல் இரு வேறு இடத்திலோ அல்லது அதே இடத்திலோ இரண்டு பொருட்கள் விளங்குமாறு அமைத்தல் என்று பொருள்படும்.

தமிழில் சிலேடைக்குப் பஞ்சமுண்டா? இருப்பினும் ஆங்கிலத்தில் ஒன்றைக் காண்போம். “I saw the man with the binoculars.” இந்த வாக்கியம் தொலைநோக்கியின் மூலம் மனிதரைப் பார்த்தேனா அல்லது தொலைநோக்கியுடனான மனிதரைப் பார்த்தேனா எனும் இருபொருளும் தாங்கி நிற்கின்றது. அதுவும் ஒரு அழகு தான். அழகு ஆபத்தானதும் கூட. வாசிப்பவரைக் குழம்பச் செய்யாமலும் இருக்க வேண்டும்.

12. ஏதுவின் முடித்தல்:

நாம் ஒன்றைப் பற்றிக் கூற முற்படும் போது அதற்கு முன்பே எதைப் பற்றியாவது சொல்ல வந்து அந்தப் பொருளும் இந்தப் பொருளும் ஏதுவாக இருக்குமானால் அதை இதனோடு முடித்து வைத்தல் என்பதை ஏதுவின் முடித்தல் என்கின்றார் பவணந்தியார்.

அஃதாவது, நமது நூலில் முந்தைய பகுதிகளில் ஏற்கனவே விளக்கிக் கூற முற்பட்டுப் பின் கால இடம் காரணமாக நிறுத்தி விட்டு அடுத்த பொருளைப் பற்றித் தொடர்ந்து கூறியிருக்கக் கூடும். அவ்வாறான பொருளுக்கும் தற்போது உரைக்கும் பொருளுக்கும் தொடர்புடையதாக இருக்குமானால் அதைப் பொருத்தமாக உரைப்பதை இங்கே குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாகச் சொல்வதென்றால், இரண்டு மதிப்பெண் கேள்வியில் எழுத முடியாததை அடுத்து வரும் ஐந்து மதிப்பெண் கேள்வியில் தெளிவாக்கி (இரண்டு கேள்விகளுக்கும் ஏதுவான தொடர்பிருக்கும் பட்சத்தில்) எழுதலாம்!

13. ஒப்பின் முடித்தல்:

நாம் இப்போது சொல்ல வரும் பொருளானது வேறு எந்தப் பொருளுக்கும் தொடர்புடையதாக இருக்குமாயின் அதையும் இங்கே சொல்லி அதையும் இதையும் முடித்து வைத்தலே ஒப்பின் முடித்தல் எனப்படும். சொல்ல வந்ததை மட்டும் சொல்லாமல் அதனோடு தொடர்புடைய மற்ற பொருட்களையும் காட்டுவது அறிவின் விசாலத்தைக் காட்டும்.

14. மாட்டெறிந்து ஒழுகல்:

இப்போது நாம் ஒரு பொருளைப் பற்றி விளக்க முற்படுகின்றோம். இதே தன்மையும் இயல்பும் கொண்ட மற்றும் ஒரு பொருளும் உள்ளதென்றால் அதையும் இதையும் இணைத்து நடைபோட்டுச் செல்வதை மாட்டெறிந்து ஒழுகல் என்று கூறுகின்றார் ஆசிரியர்.

எடுத்துக்காட்டாக ஒரு சட்டத்தின் உட்பிரிவைப் பற்றிக் காணும் போது அதில் கூறப்பட்டிருக்கும் தண்டனை மற்றுமொரு சட்டத்தின் மற்றும் ஒரு உட்பிரிவிலும் இருக்குமானால், அதே போன்று இதிலும் தண்டனை சொல்லப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிடலாம்.

மேலே குறிப்பிட்டிருக்கும் மூன்று உத்திகளுக்கும் நிறைய தொடர்புகளும் நுட்பமான வித்தியாசங்களும் உள்ளன. அதை உணர்ந்து ரசியுங்கள்!

15. இறந்தது விலக்கல்

முடிந்து போன கதையைப் பற்றி அதிகம் சொல்லக் கூடாது என்பதை இறந்தது விலக்கல் என்கின்றார் ஆசிரியர். பழையன கழிதலும் புதியன புகுதலும் எனும் சொற்றொடரை சாபகம் வைத்துக் கொள்வது நல்லது. காலம் மாறிக் கொண்டே வருகின்றது. "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்" எனும் குறளையும் ஒப்பு நோக்குதல் வேண்டும். எடுத்துக்காட்டாக நிறுமச் சட்டம் 2013 வந்து இத்தனை ஆண்டுகள் ஆனபின்னும் இன்னமும் 1956 சட்டத்தைப் பற்றி அதிகம் விளக்குவது பயனளிக்குமா?

16. எதிரது போற்றல்:

எவ்வாறு முடிந்து போனதை விலக்குகின்றோமோ, அதே சமயத்தில், அந்த இடத்தில் அடுத்து எதிர்காலத்தில் வர இருப்பதை முன்கூட்டியே அறிந்து அதைப் போற்றல் நன்று எனப்படுகின்றது. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை அதிர வருவதோர் நோய் எனும் வள்ளுவர் சொல் ஒப்பு நோக்க இனிது.

17. முன்மொழிந்து கோடல்

பின்னால் நாம் ஏதோ ஒன்றைப் பற்றிச் சொல்லப் போகின்றோமென்றால் அதைக் குறித்துப் பூடகமாகச் சரியான இடத்தில் முன்கூட்டியே மொழிந்து கூறுவதை முன்மொழிதல் என்கின்றோம். இதனால் காண்போர் திகைக்கா வண்ணம் இருப்பதற்கு வழிவகை செய்யப்படுகின்றது. ஏற்கனவே கூறப்பட்டதன் தொடர்பும் தொடர்ச்சியும் வாசிப்போருக்கு விளங்கும்.

18. பின்னது நிறுத்தல்

ஒரு பொருளைப் பற்றிச் சொல்ல வரும் போது ஒரு விடயம் அங்கே சொல்வதற்குப் பொருத்தமாக இல்லாதிருந்தால் அங்கே அதைக் குறிப்பிடாமல் பின்னால் ஏதேனும் ஓரிடத்தில் அது பற்றி விளக்க முற்பட வேண்டும். எனவே பொருத்தமில்லாததை இணைத்து வைக்கலாகாது என்பது இதன் மூலம் தெரிகின்றது.

19. விகற்பத்தின் முடித்தல்:

ஒரு பொருளுக்கு ஆரம்பம் ஒன்றாக இருப்பினும் இரண்டு வேறு முடிவுகள் இருக்குமானால் அவற்றுக்குள்ளான வேறுபாடுகளைக் காட்டி அதை ஆங்காங்கே முடித்து வைத்தல் என்பதை விகற்பத்தின் முடித்தல் என்று கூறுகின்றார் ஆசிரியர்.

எடுத்துக்காட்டாக ஒரு மாநிலத்தின் உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கின் முடிவும், மற்றொரு மாநிலத்தின் உயர்நீதி மன்றத்தில் அதே போன்ற ஒரு வழக்கின் முடிவும் வெவ்வேறாக இருக்குமாயின் இரண்டையும் தெளிவுறக் காட்ட வேண்டும். அப்போது தான் வாசிப்பவருக்கு நலம்பயக்கும்.

20. முடிந்தது முடித்தல்:

அவ்வாறு விகற்பத்தின் முடித்ததை அதன் தொடர்பும் வேறுபாடும் மற்றவர்களுக்குப் புலப்படும் வண்ணம் தொகுத்து அதை ஒன்றாக முடித்தலும் வேண்டும். இல்லாவிடில் குழப்பமே மிஞ்சும். இதைப் பற்றி மற்றுமொரு உத்தியிலும் கூறுகின்றார் ஆசிரியர்.

இனி மீதம் உள்ள 12 உத்திகளையும் இந்தப் பகுதியில் காண்போம்.

உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்
ஒரு தலை துணிதல் எடுத்துக்காட்டல்
எடுத்த மொழியின் எய்த வைத்தல்
இன்னது அல்லது இது என மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல் (15)
பிற நூல் முடிந்தது தான் உடன்படுதல்
தன் குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல்
சொல்லின் முடிவின் அப் பொருள் முடித்தல்
ஒன்று இனம் முடித்தல் தன் இனம் முடித்தல்
உய்த்துணர வைப்பு என உத்தி எண் நான்கு ஏ

21. உரைத்தும் என்றல்

ஒரு பொருளைப் பற்றி விளக்கிக் கொண்டிருக்கும் போது மற்றொரு பொருளைப் பற்றியும் அறிமுகப்படுத்த வேண்டியிருக்கலாம். அப்போது புதிய பொருளைப் பற்றி விளக்க ஆரம்பித்தோமேயானால் வாசிப்பவரின் கவனம் சிதறக் கூடும் அல்லவா? எனவே அப்புதிய பொருளைப் பற்றி பின்னால் ஓரிடத்தில் விளக்குவோம் என்று குறிப்பிடுவதையே "**உரைத்தும் என்றல்**" என்கின்றார் ஆசிரியர்.

இஃது எழுதுகலையில் ஒரு முக்கியமான உத்தியாகும். எது இடத்துக்குத் தேவையானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கின்றதோ அதை மட்டுமே விளக்கிவிட்டு மற்றவற்றைப் பின்னால் விரித்து விளக்க ஏதுவாக இவ்வுத்தியைப் பயன்படுத்தலாம்.

எடுத்துக்காட்டாக, நம்முடைய பத்துக் குற்றங்கள் பகுதியில் நாம் கண்ட "கூறியது கூறல்" எனும் குற்றத்தை விளக்க முனையும் போது பின்னால் இது பற்றி உத்தியில் காணலாம் என்று அடியேன் குறிப்பிட்டிருப்பதைக் கண்ணுறுங்கள்!

22. உரைத்தாம் என்றல்

இதுவும் முந்தைய உத்தியைப் போன்றதே ஆகும். ஒரு பொருளை விளக்க முற்படும் போது ஏற்கனவே விளக்கிய பொருளையும் சுட்டிக் காட்ட வேண்டியிருக்கலாம். அவ்வமயம் கூறியதையே திரும்பவும் கூறாமல், "கூறியது கூறல்" எனும் குற்றத்தை நீக்கி, இதைப் பற்றி நாம் முன்னரே இவ்விடத்தில் கண்டுள்ளோம் என்று உரைப்பதையே "உரைத்தாம் என்றல்" என்கின்றார் ஆசிரியர்.

மேற்கண்ட இவ்விரு உத்திகளாலும் கட்டுரை அல்லது நூலின் தொடரோட்டம் பாதிக்கப்படாமலும் அதே சமயத்தில் பொருள் விளக்கமும் பொருத்தமான இடங்களில் கிடைக்கப் பெற்றும் வாசகர் பயன்பெறுவார்.

23. ஒருதலை துணிதல்

ஒரு நூலின் ஆசிரியர் ஒரு விவாதத்தை முன்னிறுத்தி இரு/பல தரப்பு வாதங்களையும் எடுத்துரைத்தால் அவரது கருத்தையும் கூறி ஏதேனும் ஒருதரப்பினை முடிவாகக் காட்ட வேண்டும். அவ்வாறு இல்லாமல் தீர்ப்பு இல்லாத வழக்கு போல் அந்தரத்தில் நிறுத்தி விடக் கூடாது. இதையே ஒருதலை துணிதல் எனும் உத்தியாகக் குறிப்பிடப்படுகின்றது.

24. எடுத்துக்காட்டல்

எந்த ஒரு பொருளையும் விளக்கும் போது பொருத்தமான, உலக வழக்கிலுள்ள எடுத்துக்காட்டுகளுடன் உரைத்தல் நன்று. அவ்வாறு தகுந்த எடுத்துக்காட்டினைத் தேர்ந்தெடுப்பது பலமுறை பயிற்சி செய்வதால் விளைகின்ற ஒரு அரிய கலை.

எடுத்துக்காட்டாக 32 உத்திகளைக் குறிப்பிடும் போது 32 பற்களை அடியேன் குறிப்பிட்டதை நினைவில் கொள்ளுங்கள்.

25. எடுத்த மொழியின் எய்த வைத்தல்

முந்தைய உத்தியில் கூறியுள்ளபடி எடுத்துக்காட்டைக் கூறினால் மட்டும் போதாது. அதைச் சரியாக இலக்கணம் அல்லது கூறவந்த பொருளுடன் பொருத்திக் காட்டவும் வேண்டும். எவ்வாறு அம்பைத் தொடுத்தால் மட்டும் போதாமல் அதைக் குறிபார்த்து இலக்கை நோக்கி எய்யவும் வேண்டுமோ அது போல் எடுத்த மொழியின் எய்த வைத்தல் தேவை என்கின்றார் ஆசிரியர். இல்லாவிடில் கற்போர் எடுத்துக்காட்டைத் தவறாகப் பொருள் கொள்ளவும் நேரும்.

26. இன்னது அல்லது இது என மொழிதல்

சில சமயங்களில் இரு பொருட்களுக்கான பண்புகள் சில பொருந்தி வரக் கூடும். அவ்வாறான சமயங்களில் வாசிப்பவர்கள் இரண்டையும் சேர்த்துக் குழம்ப நேரிடலாம். அவ்வாறு குழம்பாதிருக்க, எது சரி, எது பொருத்தமில்லாதது என்று பொருத்தமில்லாததையும் குறிப்பிட்டு ஏன் பொருந்தி வராது என்று கூறவும் வேண்டும்.

27. எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்

எவையெல்லாம் கூறாமல் விடுப்பட்டுப் போயிருக்கின்றதோ அவையெல்லாம் யோசித்துப் பார்த்து அவற்றையும் இலக்கணம் மற்றும் பொருளுடன் எய்த வைக்க வேண்டும் என்கின்றார் ஆசிரியர். ஆங்கிலத்தில் Exceptions என்று அழைக்கின்றோம் அல்லவா? அவற்றின் தன்மைகளையும் பொருள் அமையுமாறு பொருத்திக் காட்டல் நன்று.

28. பிறநூல் முடிந்தது தான் உடன் படுதல்:

பிற நூற்களில் ஏற்கனவே தீர்மானமாக நமது கருத்திற்கு ஒப்பவும் சிறப்பாகவும் கூறப்பட்டிருக்குமாயின் அதை மேற்கோள் காட்டுவது மட்டுமின்றி அதை அங்கீகரிக்கவும் வேண்டும். அவ்வாறு பிற நூற்களையும் குறிப்புகளையும் மேற்கோள் காட்டுவது நமது அறிவின் விசாலத்தை மட்டுமின்றி மனதின் விசாலத்தையும் காட்டும்!

29. தன்குறி வழக்கம் மிக எடுத்துரைத்தல்:

பிறநூல்களில் முடிந்த தீர்மானங்கள் தவிர, நாம் ஏதேனும் புதியதாக வழக்கத்துக்குக் கொண்டு வர முனைவதை விளக்கமாகவும், பல இடங்களில் ஆங்காங்கே பொருந்துமாறும் தகுந்த எடுத்துக்காட்டுகளுடனும் மிகவும் கவனமாக எடுத்துரைத்தல் அவசியமாகின்றது. இதனால் முக்கியத்துவத்தினை உணர்ந்து மக்களும் அதைக் கடைப்பிடிக்க ஏதுவாக இருக்கும்.

30. சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்

சொற்களைச் சொல்வதோடு முடித்து விடாமல் அவற்றோடு அவற்றின் பொருளையும் சேர்த்துக் கூறுவது ஒரு உத்தியாகும். ஏனெனில் ஒரு சொல்லுக்குப் பல பொருட்கள் இருக்கக் கூடும். இவ்விடத்தில் எப்பொருள் சரியென்று புரியாமல் போகக் கூடும். எனவே தான் சொல்லோடு அதன் பொருளையும் முடிந்து வைப்பது நல்லது!

உதாரணமாக, "தருவது சிறப்பு" என்ற சொற்றொடரில், தரு என்ற சொல்லுக்கு மரம் (கற்பகத் தரு) என்றும் ஒரு பொருள் இருப்பது அறிந்து இங்கே, "கொடுப்பது சிறப்பா அல்லது மரமது சிறப்பா?" என்று எந்தப் பொருளில் வழங்கப்படுகின்றது என்று கூற வேண்டும். இன்னது அல்லது இது எனக் கூறலிலும் இதை நினைவில் கொள்ளலாம்.

31. ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்

விதியால் ஒன்றி ஒற்றுமைப் பட்டவைகளை ஒன்றாக இணைத்து அவற்றைக் கூட்டி முடித்தலும், ஒன்றைச் சொல்கையில் அதற்கு இனமாகிய மற்ற ஒன்றையும் அதனோடு முடித்தலும் இங்கே குறிப்பிடப் படுகின்றது.

இரண்டுக்கும் அப்படி என்ன வேறுபாடு என்று நீங்கள் கேட்கலாம். பேராசிரியர் க. வெள்ளைவாரணன் அவர்கள் தமது தொல்காப்பியம் உரைவளம் எனும் நூலில் இளம்பூரணரின் உத்திகள், தொல்காப்பியம் காட்டும் உத்திகள் மற்றும் நன்னூல் ஆசிரியர் குறிப்பிடும் உத்திகளை ஒப்பு நோக்கிக் கூறுவதைக் கண்ணுறுங்கள்!

வராததைக் கொண்டு வந்ததை முடித்தல் - ஒன்றினம் முடித்தல்.
வந்ததைக் கொண்டு வராததை முடித்தல் - தன்னினம் முடித்தல்.

எடுத்துக்காட்டாக, ஒன்று முதல் ஒன்பது வரை ஏற்கனவே கூறிவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அடுத்ததாக இதுவரை வராத பத்து என்ற எண் அடுத்து வரும் போது அதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கும் எண்களோடு இது தான் அடுத்து வரும் வரிசை எண்ணாகும் என்று சேர்த்து முடித்துக் காட்டுவது ஒன்றினம் முடித்தல் ஆகும்.

இனி, பத்து என்ற எண்ணானது இரட்டை இலக்க எண் என்று குறிப்பிட்டு இதுவரை வராத மற்ற இரட்டைஇலக்க எண்களுடன் முடித்துக் காட்டுதல் தன்னினம் முடித்தல் ஆகும்!

இப்படியே தொடுத்து நூலைச் சுவைபட ஆக்கலாம்.

32. உய்த்துணர வைப்பு

முடிவான முடிவாக ஆசிரியர் குறிப்பிட்டிருக்கும் உத்தியின் தன்மை தான் எவ்வளவு சிறப்பு வாய்ந்தது? நமது நூலைக் கற்ற பிறகு மீண்டும் மீண்டும் அதை மகிழ்வுடன் (உய்த்து) வாசிக்க வைப்பதாகவும், உணர்ந்து பயன்படுத்தத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும் எனும் குறிப்பு இதில் இருக்கின்றது.

நன்னூலின் முன்னூலான தொல்காப்பியத்திலும் முப்பத்தியிரண்டு உத்திகள் தொல்காப்பியரால் குறிப்பிடப்பட்டிருத்தலால் நன்னூல் ஆசிரியர் மட்டுமே இவ்வுத்திகளைத் தொகுத்தார் என்று கூறுதற்கு இடமில்லையாயினும், சில பழைய உத்திகளுக்குப் பதிலாக புதிய உத்திகளைக் காட்டிச் சிறப்புச் சேர்த்திருக்கின்றார் எனலாம்.

ஓத்து, படலம், சூத்திரம், உரை, காண்டிகை மற்றும் விருத்தி:

குற்றங்கள், அழகுகள், உத்திகள் என்று பலவற்றை அடுக்கி நூலை எழுதும் கலையை எடுத்துரைத்த ஆசிரியர் அடுத்ததாக நூலை எவ்வகையில் தொடர்ந்து செலுத்த வேண்டும் என்கின்றார். அதுவே தந்திர உத்தியாகும்.

நூல் பொருள் வழக்கு ஒடு வாய்ப்ப காட்டி
ஏற்புழி அறிந்து இதன் கு இ வகை ஆம் என
தகும் வகை செலுத்துதல் தந்திர உத்தி

எழுத்தில் விளங்கும் நூலினது பொருளை உலகத்து வழக்கத்தோடு வாய்க்குமாறு காட்டி அஃது ஏற்கும் இடத்தினை அறிந்து இதற்கு இவ்வகையே பொருத்தமாகும் என்று தகுந்த வகை கொண்டு நூலைத் தொடர்ந்து செலுத்துதல் நூலின் தந்திர உத்தியாகும்.

தலைப்பில் குறிப்பிட்டிருக்கும் ஓத்து, படலம், சூத்திரம், சூத்திர நிலை, காண்டிகை, உரை மற்றும் விருத்தி ஆகியவை யாவும் ஒரு முழு நூலையும் எழுதுவோருக்கு உரைத்ததாக இருப்பதாலும், நமது தொடர் கட்டுரை மாணவர்களின் தேர்வு மற்றும் அதில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு வழி வகுப்பது ஆகிய நோக்கங்களை முக்கியமாகக் கொண்டிருப்பதாலும் சற்றே விரைவாக இப்பகுதிகள் குறித்துப் பார்க்கலாம்.

இவற்றுள் ஓத்து, படலம் ஆகியவை நூலின் உறுப்பாகும். சூத்திரமும் உரைகளில் காண்டிகையுரை, விருத்தியுரை ஆகியவைகளும் நூலைச் செலுத்தும் நடைகளாகும்.

நேர் இன மணி ஐ நிரல்பட வைத்தாங்கு
ஓர் இன பொருள் ஐ ஒரு வழி வைப்பது
ஓத்து என மொழிப உயர் மொழி புலவர்

ஒரே போலிருக்கும் மணிகளை வரிசையாக கோர்ப்பது போல ஒரே இனப் பொருளை ஒன்றாய்த் தொடர்ந்து வைப்பது ஓத்து என்று உயர்மொழிப் புலவர்கள் மொழிவார்கள் என்கின்றார். மல்லிகை மலர்களாகத் தொடுத்து ஒரு மலர்ச்சரமாக்குவது ஓத்து ஆகும். எடுத்துக்காட்டாக நிறுவனச் சட்டத்தின் கீழ் ஒரு இயக்குநருக்கு வழங்கப்படும் தண்டனைகள் குறித்து வரிசையாக விளக்குதலைக் குறிப்பிடலாம்.

ஒரு நெறி இன்றி விரவிய பொருள் ஆல்
பொது மொழி தொடரின் அது படலம் ஆகும்

ஒருவழிப்படாது படர்ந்து நிற்கும் பொருளால் பொதுவான மொழி கொண்டு தொடருமானால் அது படலம் ஆகும்.

சில் வகை எழுத்து இல் பல் வகை பொருள் ஐ
செவ்வன் ஆடி இன் செறித்து இனிது விளக்கி
திட்பம் நுட்பம் சிறந்தன சூத்திரம்

சிலவகை எழுத்துகளைக் கொண்டே பலவகைப் பொருளைச் செவ்வனே கண்ணாடி எவ்வாறு செறித்து காட்டுகின்றதோ (அந்தக் காலத்திலேயே அகலக் கோண முறை (Wide-angle lens) ஆசிரியர் அறிந்திருப்பாரோ?) அஃதே போல் இனிது விளக்கி திண்மையும் நுண்மையும் சிறந்து விளங்குவது சூத்திரம் ஆகும். இதில் செறித்து என்ற சொல்லாடலைக் காணுங்கள். உணவு செறித்தலுக்கும் இதே சொல் பயனாகின்றது.

சிறிய மாத்திரை மூலம் பெருநோயைக் குணப்படுத்துவது போல சூத்திரத்தின் மூலம் பெரும்பொருளைக் காட்டவேண்டும்!

ஆற்று ஒழுக்கு அரிமா நோக்கம் தவளைப்
பாய்த்து பருந்தின் வீழ்வு அன்ன சூத்திர நிலை

ஒரு சூத்திரம் ஏனைய சூத்திரங்களோடு எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கவேண்டும் என்பதை சூத்திர நிலை என்கின்றோம். சூத்திரத்தின் நிலைகள் நான்கு வகைப்படும். அவையாவன:

1. ஆறு ஓடுதல் போலே எவ்வித நடை வேறுபாடும் இன்றி முதலிலிருந்து இறுதி வரை வாசிக்க ஏதுவாக தங்குதடையின்றிச் செல்லும் நடையாகும்.

அருள்அல்லது யாதுஎனின் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்

இப்போது மேலுள்ள குறளின் பொருளைக் காண்போம். அருள் அல்லாதது யாது என்றால் அது கொல்லாமையைக் கொல்லுதலாம். பொருளல்லது எதுவென்றால் அவ்வூனை உண்ணுதலாகும். இதில் நடை வேறுபாடின்றி ஆரம்பம் முதல் இறுதி வரை செல்கின்றோம் அல்லவா? அது ஆற்றொழுக்கு.

2. சிங்கம் போல் முன்னும் பின்னும் காணும் வகையில் பொருளை நடுவில் வைத்தல் அரிமா நோக்காகும். எடுத்துக்காட்டாக அறம், பொருள் இன்பம் ஆகிய மூன்றையும் எடுத்துக் கொள்ளலாம்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனுள் அரிமா நோக்குடையது பொருள். பொருள், இன்பத்துக்கும் அறத்துக்கும் இன்றியமையாதது. பொருளில்லையேல் இன்பத்துக்கும் அறத்துக்கும் ஆக்கம் ஏது? - திரு. வி. க.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

மேலுள்ள குறளை, ஆற்றொழுக்காக வாசியாமல் அரிமா நோக்கோடு, “கற்பவை” என்ற சொல்லை இருபுறத்துக்கும் எடுத்துக் கொண்டு கற்பவற்றைக் கசடு அறக் கற்கவும், அவ்வாறு கற்பவை கற்றபின் அதற்குத் தகுந்த வகையில் நிற்கவும் பொருள் காண்பது சிறப்பு.

3. தவளை நீரில் தாவித் தாவிக் குதிப்பது போல் பொருளையும் தாவித் தாவிச் சென்று காணுமாறு செய்வது தவளைப் பாய்த்து ஆகும்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

மேற்காணும் குறளில் ஆற்றொழுக்காக வாசித்தலைக் காட்டிலும் என்னதான் பலவற்றைக் கற்றாலும் உலகத்தோடு ஒட்ட ஒழுகலைக் கல்லாதார் அறிவிலாதார் என்று “பலகற்றும்” என்ற சொல்லைத் தாவித் தான் பொருள் கொள்ளல் வேண்டும்.

அருள்அல்லது யாதுஎனின் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்

ஏற்கனவே குறிப்பிட்ட மேற்கண்ட குறளை தவளைப் பாய்தலாகவும் வாசிக்கலாம். அருள் யாது எனின் கொல்லாமை, அல்லது யாது எனின் கோறல் (கொல்லல்) என்று தவளை போல் பாய்ந்து வாசிக்கவும் சரியான பொருளையே தருவது இக்குறள்.

4. மேலே வானத்தில் வட்டமிடும் பருந்து திடீரென்று பாய்ந்து வந்து இரையைத் தூக்கிச் செல்வது போலவே சூத்திரத்திலும் எங்கிருந்தோ தொடர்பேதுமில்லாமலேயே பொருளைச் சுட்டிக் காட்டுதல் பருந்து வீழ்வெனும் சூத்திர நடையாகும்.

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

மேற்கண்ட குறளை விளக்குவதாயின் அதற்கு முந்தைய இரண்டு குறட்பாக்களும் அறிந்திருக்க வேண்டும்! ஆகவே காமத்துப்பாலில் இருக்கும் 1238, 1239 ஆகிய இரண்டு

குறட்பாக்களையும் வாசித்துப் பொருளுணர்ந்து அதன் பின்னரே இதன் பொருள் உணருமாறு எங்கிருந்தோ வந்து பொருளை உணர்த்துவதால் இது பருந்து வீழ்வு ஆகும்.

இப்போது காதல் கதையைக் காண்போம். தலைவனும் தலைவியும் இடையே காற்றுக் கூடப் புகாதவாறு தழுவியிருந்தனர். தலைவன் வினைமுடிக்கச் செல்வதற்காகக் கைகளைச் சற்று அகற்றியதுமே தலைவியின் நெற்றி பசலை நோய் கண்டது. இன்னும் சற்றே விலகிப் பிரிந்ததால் குளிர் காற்று இடைப் புகுந்தது. இதனால் அடுத்ததாகத் தலைவியின் கண்கள் பசலை நோய் கண்டன. இந்த நிகழ்வுகளை மேற்கூறிய இரண்டு குறட்பாக்களும் குறிப்பிடுகின்றன.

இந்தக் குறளோ, இன்னும் ஒருபடி மேலே சென்று, ஒளிபொருந்திய தலைவியின் நெற்றி (ஒண்ணுதல்) கண்ட பசலை நோயைக் கண்டு கண்ணில் ஏற்பட்ட பசலை நோய் வருத்தமடைந்தது என்கின்றது! அதாவது நெற்றியின் பசலை நோய் தன்னை முந்திக் கொண்டதை நினைத்து கண்ணின் பசலை நோய் துன்பப்பட்டது என்கின்றார் வள்ளுவர். என்னவொரு நுட்பமான இலக்கிய இன்பம்?

இவ்வாறு எங்கோ இருப்பதையும் இங்கே இருப்பதையும் தொடர்பிட்டுக் காட்டுதல் பருந்து வீழ்வு எனும் சூத்திரமாகும்.

பிண்டம் தொகை வகை குறி ஏ செய்கை
கொண்டு இயல் புறனடை கூற்றன சூத்திரம்

இனி சூத்திரத்தின் காரணப் பெயர்களைக் காண்போம்.

கருப்பொருளாக அமைந்து பலவகைத் திறப் பொருட்களையும் உள்ளடக்கிப் பொதுவாக வருவது பிண்டச் சூத்திரமாகும். இது தொடக்கத்தில் வரும். நூலின் அறிமுகத்தில் பலவற்றையும் காட்டுதல் பிண்டச் சூத்திரம்.

தொகுத்துக் காட்டுதல் தொகைச் சூத்திரமாகும்.

தொகுத்தவற்றை வகை வகையாகப் பிரித்தல் வகைச் சூத்திரமாகும்

குறிக்கோளைப் பின்பற்றி வழுவாமல் செல்தல் குறிச் சூத்திரமாகும்.

தான் சொல்ல வந்ததை நூலின் மூலம் நாட்டச் செய்கையே செய்கைச் சூத்திரம் ஆகும்.

கொண்டியல் சூத்திரமாவது பிறர் கூறியனவற்றை தானும் அப்படியே ஏற்றுக்கொண்டு அவர் கூறிவற்றைத் தானும் கூறுதல் ஆகும்.

முடிவுரையாக அனைத்தையும் தொட்டுக்காட்டிச் செய்வது புறநடைச் சூத்திரமாகும். இது நூலின் முடிவில் காணப்படும்.

நூலின் ஆரம்பம் முதல் முடிவு வரை காணப்படும் சூத்திரங்களின் நிலை, காரணப் பெயர்களைக் கண்டோம். அடுத்த பகுதியில் உரை, காண்டிகை, விருத்தி ஆகியவற்றைக் காண்போம்.

உரை, காண்டிகை, விருத்தி:

பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரந் துணிவு பயனோ
டாசிரிய வசனமென் றீரே ழுரையே .

ஆஹா! என்னே தமிழின் பெருமையும், அழகும்? நான்கே வரிகளில் எத்தனை கருத்துகளைப் பொதிந்து வைக்க இடமளிக்கின்றது? இனி உரையின் விளக்கத்தினைக் காண்போம்.

நூலுக்கு எழுதப்படும் அல்லது கற்பிக்கப்படும் உரையாவது பதினான்கு வகைப்படும்! (ஈரேழ் என்ற வாய்ப்பாடு) அவையாவன,

1. **பாடம்** - நூலின் ஆசிரியர் கூறிய மூல பாடத்தைக் குறிப்பிடுதல் (நம் இந்தத் தொடரில் ஆங்காங்கே குறிப்பிடுவது போல்)
2. **கருத்து** - நூலாசிரியர் சுருங்கக் கூறியிருக்கும் சூத்திரத்தின் கருத்தைக் குறிப்பிடுதல்.
3. **சொல்வகை** - சொல்லும் வகை - தகுந்தவாறு பிரித்து வகுத்துக் காட்டுதல்
4. **சொற்பொருள்** - சொற்களின் பொருளை ஒவ்வொரு சொல்லாக விளங்குமாறு விரித்துக் காட்டுதல் - பதவுரை என்றும் கூறுவார்கள்.
5. **தொகுத்துரை** - வகுத்துக் காட்டியதை வேண்டிய இடத்தில் தொகுத்தும் காட்டுதல். இதனைப் பொழிப்புரை என்பர்.
6. **உதாரணம்** - பொருள் பொருந்துமாறு தகுந்த எடுத்துக்காட்டுகளை உலக வழக்கத்தில் இருந்து குறிப்பிடுதல்.
7. **வினா** - வாசகர்கள் எண்ணங்களைத் தூண்டுமாறு வினாக்களைத் தொடுத்தல்.
8. **விடை** - அவ்வினாக்களுக்குத் தாமே விடையும் கூறுதல்.
9. **விசேடம்** - நூலை மேலோட்டமாக வாசித்து விட்டுச் செல்பவர்கள் நின்று நிதானித்து அறிந்து கொள்ளுமாறு சிறப்பான செய்திகளைக் குறிப்பிட்டுச் சொல்லுதல்.
10. **விரிவு** - தேவையான இடங்களில் விரித்து விளக்கமிடுதல் - இதை விருத்தியுரை என்பர்.
11. **அதிகாரம்** - அதிகாரம் என்ற சொல்லுக்குப் பலப்பல பொருட்கள் இருப்பினும் நூலின் உட்பகுதியான அதிகாரத்தை இங்கே குறிக்கின்றது. திருக்குறள் 133 அதிகாரங்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு அதிகாரமும் அதனதன் தலைப்பின்வழி குறட்பாக்களைக் கொண்டு விளங்குகின்றது. அவ்வாறான உட்பகுதியில் வரும் அதிகாரத்தோடு பொருத்தி உரை எழுதல் அவசியமாகும்.
12. **துணிவு** - வாசகருக்கு எந்த வித ஐயமும் வந்து விடாதபடிக்கு ஆணித்தரமாகத் துணிந்து முடிவைக் கூறுதல்.
13. **பயனோடு** - நாம் வாசிக்கும் பாடத்தின் பயன் (அறம், பொருள், இன்பம், வீடு) யாது என்றும் உலக வழக்கில் அது எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்படுகின்றது என்பதை உரையாசிரியர் விளக்க வேண்டும்.
14. **ஆசிரிய வசனம்** - ஆசிரியரின் சூத்திரங்களையும், நூற்பாக்களையும், செய்யுள்களையும், பாடல்களையும் அப்படியே மேற்கோள் காட்டவேண்டும்.

இத்தனையும் உள்ளடக்கி எழுதப்படும் உரை எவ்வளவு அருமையாக இருக்கும்? இதிலிருக்கும் அத்தனையும் மாணவர்கள் தங்கள் தேர்வுக்கெனப் பயன்படுத்திக் கொள்ளலாம்!

இனி காண்டிகையுரையையும் விருத்தியுரையையும் காணலாம்.

கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை ஆக்க லானும்
சூத்திரத்துள் பொருள் தோற்றுவ காண்டிகை

மேற்கூறியபடி வகுத்துக் காட்டிய நூலின் உரைகளை இரண்டாகத் தொகுத்து காண்டிகை மற்றும் விருத்தி என்று இரண்டாகப் பட்டியலிடுகின்றார் ஆசிரியர்.

பாடலின் கருத்து, சொற்களின் விளக்கங்கள் (பதப்பொருள் - பதவுரை), எடுத்துக்காட்டு ஆகிய மூன்றும், அவற்றோடு வினா, விடை ஆகியவற்றையும் கொண்டு சூத்திரத்தின் பொருளைக் காட்டுவது காண்டிகை உரையாகும்.

சூத்திரத்துள் பொருள் அன்றியும் ஆண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன் உரையானும் பிற நூலானும்
ஐயம் அகல ஐங் காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி

சூத்திரத்தின் உட்பொருளும், மேலும் அதனுடைய தொடர்புடைய இன்றியமையாதனவையும், விளக்குவதாகத் தனது உரையாலும், பிறநூற்களை மேற்கோள் காட்டியும், எந்த வித ஐயத்தினையும் நீக்கும் விதமாக மேற்கண்ட ஐந்து உறுப்புகளையும் கொண்டு உள்ளதை உள்ளவாறு உணர்த்திக் காட்டுவது விருத்தியுரை ஆகும்.

<u>ஆசிரியனது வரலாறு:</u>

இப்போது, நம் நூற்பாதை தொடரின் மிக முக்கியமான கட்டத்தில் இருக்கின்றோம். ஆம், அடுத்ததாக பவணந்தி முனிவர் இன்றளவும் பொருந்துமாறு விளக்கியிருக்கும் ஆசிரியர்களின் இலக்கணம், மாணவர்களின் இலக்கணம், எளிதாக நூலைக் கற்கும் வழிமுறைகள் ஆகியவற்றைச் சற்றே விளக்கமாகக் காணலாம். இவையனைத்தையும் ஆசிரியர்களும் மாணவர்களும் கருத்தில் கொள்வாரே ஆயின் அதைக்காட்டிலும் வேறென்ன சிறப்பு?

குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே.

ஒரு மூல நூலுக்கான பாடம் கற்பிக்கும் மற்றும் உரையெழுதும் ஆசிரியர் எவ்வாறான மேன்மை கொண்ட குணங்களைக் கொண்டவராக இருத்தல் அவசியம் என்று குறிப்பிட்டு ஆசிரியர்களின் தகுதியை வரையறுக்கின்றார் பவணந்தியார்.

ஒரு ஆசிரியரானவர் உயர்ந்த குலத்தின் வழி வந்தவராகவும், கருணை உள்ளம் கொண்ட அருள் பொருந்தியவராகவும், தெய்வத்தின் மீது பயமும் பக்தியும் உடையராகவும், கசடறக் கற்பிக்கத் தாம் கொண்ட கொள்கை ஆக, குலம், அருள், தெய்வம், கொள்கை ஆகிய நான்கினும் மேன்மையுடையவராக இருத்தல் வேண்டும் என்கின்றார்.

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தார்
பட்டாங்கில் உள்ள படி - நல்வழி

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான்கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு - மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகுமாம் குணம் . - மூதுரை

உயர்ந்த குலத்தின் வழி வந்தவர் என்றதும் ஏதோ ஆசிரியர் சாதியைக் குறிப்பிடுவதாக எண்ண வேண்டாம். இட்டார் பெரியார் இடாதார் சிறியார் எனும் ஔவை நல்வழியில் கூறியபடியும், அதே ஔவை இன்னுமொரு மூதுரை பாடலில் பரந்த மனப்பான்மை உடைய இடுகின்ற குணமானது குலத்தின் வழியாகவே வருமென்று கூறியபடியும் எடுத்ததும் குலம் என்று ஆரம்பிக்கின்றார் ஆசிரியர்.

கலைபயிறெளிவு - பல கலைகளைப் பயின்ற தெளிவும் ஆசிரியருக்கு இருத்தல் அவசியமாகும். அப்போது தானே அவற்றை மாணாக்கர்களுக்கு விளங்க வைக்க இயலும்?

கட்டுரை வன்மை - நூல் பொருளை மாணாக்கர் எளிதில் உணரும்படி கட்டாகக் கட்டி உரைத்தும் தொடுத்தும் சொல்லும் வன்மை ஆசிரியருக்கு அவசியமானது.

நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சி - அட! இதைக் காட்டிலும் ஆசிரியர்களுக்குப் பொருத்தமானவற்றை எடுத்துக்காட்ட முடியுமா? நிலம், மலை, நிறைகோல் - நடுவாகி நின்று நிறையளக்கும் தராசு/துலாக்கோல், மலர் ஆகியவற்றின் மாட்சி பொருந்தியவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும்.

உலகு இயல் அறிவு - உலக வழக்கமும், அதன் நடையை அறியும் அறிவும், **உயர் குணம் இனையவும் அமைபவன்** - உயர்வாகிய குணங்கள் இவை போல்வன பிறவும் நிறையப் பெற்றவன், **நூல் உரை ஆசிரியன்** - நூல் கற்பிக்கும் ஆசிரியன் ஆகத் தகுதியானவன் என்கின்றார்.

உலகில் எத்தனையோ பொருட்கள் இருக்க ஏன் நிலம், மலை, நிறைகோல் மற்றும் மலர் ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கூறியிருக்கின்றார் பவணந்தி முனிவர் என்று தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கின்றதா? அடுத்து வரும் பகுதியில் அவரது அழகான விளக்கங்களுடன் அவற்றைக் காண்போம்.

தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல் சொல்பொருள் விரித்தல் மற்றும் எடுத்துக் காட்டல் எனும் உத்திகளுக்குத் தாமே எடுத்துக்காட்டாக இருப்பது போல், ஏன் ஆசிரியர்களை நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகிய நான்கினுக்கும் ஒப்பாக்கி வைக்கப்பட்டிருக்கின்றது என்று விளக்கிக் காட்டுகின்றார் ஆசிரியர். முதலில் நிலம்:

தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி அளவில் பயத்தலும்
மருவிய நல் நில மாண்பு ஆகுமே

கண்ணுக்குத் தெரிகின்ற அளவு நிலம் எவ்வாறு செல்லச் செல்ல இன்னும் எவ்வளவு பெரிதோ எனும் வியக்கும் வண்ணம் பரந்து விரிந்து இருப்பதாலும், எவ்வளவு பெரிய பாரமான பொருள் தாக்கினாலும் அதனால் கலங்காதிருக்கும் உறுதிப்பாடும், அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல என்று வள்ளுவர் உவமை சொல்லும் அளவுக்குப் பொறுமையும், பருவத்துக்கும், உழவர் உழவு செய்யும் முயற்சிக்கும் தகுந்த அளவில் பயன் அளித்தலும் நல்ல நிலத்திற்கான மாட்சி ஆகும்.

அது போல பரந்து விரிந்த சானமும், எதற்கும் கலங்கா உறுதியும், யாரும் இகழ்ந்தால் கூட அதனால் சினமேற்கொளாத பொறுமையும், மாணவர்களின் பருவத்தையும் (வயதையும்) கணக்கில் கொண்டு அவர்தம் முயற்சிக்குத் தகுந்த அளவில் பயன் அளிப்பதும் ஒரு நல்லாசிரியரின் பண்பாகும்.

அளக்கல் ஆகா அளவும் பொருளும்
துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளம்தரும் வண்மையும் மலைக்கே

முன்பு கண்ணுக்கே தெரியாத அளவுக்கு நிலத்தின் விரிவைக் கண்டோம் அல்லவா? இங்கே கண்ணுக்குத் தெரிந்தாலும் அளக்க முடியாத அளவும், எண்ண முடியாத அளவு பொருட்களைக் கொண்டிருப்பதும், எவராலும் அசைத்துக் கூடப் பார்க்க முடியாத (துளக்கல்) நிலைப்பாடும், வெகுதூரத்தினின்று கண்டாலும் வியக்க வைக்கின்ற தோற்றமும், வறட்சிக் காலத்திலும் கூட தம்மை அண்டியுள்ள உயிர்கட்கு ஏதேனும் ஒரு வகையில் நீரையும் வளத்தையும் தரக்கூடிய வல்லமையும் மலையின் மாட்சியாம்.

அளந்து அறிய முடியாத அளவுக்கு கல்வியில் சிறந்தும், பல் துறை அறிவும், எவராலும் அசைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு ஆழ்ந்த பாடப்புலமையும், நெடுந்தொலைவிற்கு அப்பால் இருப்பவருக்கும் புகழால் உயர்ந்த தோற்றமளித்தலும், தாம் வறுமையால் வாடினாலும், கட்டணம் செலுத்த முடியாத ஏழ்மையான மாணவருக்குக் கல்வியை வாரிவழங்கும் வள்ளல் தன்மையும் ஓர் ஆசிரியருக்கு இருந்தால் அவர் நல்லாசிரியர் தானே?

ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே

சந்தேகம் இல்லாமல் பொருளின் நிறையை உணர்த்திக் காட்டுவதும், எது உண்மைநிலை என்று காட்டும் தன்மையும் கொண்டது தராசு எனப்படும் நிறைகோல்.

அதே போன்று யாரும் எவ்வித ஐயத்துடன் வினா எழுப்பினாலும் அத்தகைய சந்தேகம் தீருமாறு உண்மைப் பொருளை உணர்த்துவதும், எப்பக்கமும் சாராது நடுநிற்றலும் ஒரு ஆசிரியரின் பண்பாக இருத்தல் வேண்டும்.

மங்கலம் ஆகி இன்றி அமையாது
யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகம் மலர்வு உடையது பூவே

சுப கருமத்திற்கு உரியதாகவும், அது இல்லாமல் நிறைவுடையதாகாது எனும் இன்றியமையாமையும், யாவரும் களித்து சூடிக் கொள்ள முன்வருவதாகவும், மென்மையானதாகவும், உரிய காலத்தில் முகம் விரிந்து அழகு படைப்பது மலரின் மாட்சி.

ஆசிரியர் நற்செயலுக்கு உரியவராய் இருக்கவேண்டும், அவரில்லாத ஒரு நிகழ்வு முழுமை பெறாத ஒன்றாக மற்றோர் நினைக்கும் வண்ணம் எல்லாச் செயல்களையும் சிறப்பிக்க அவர் இன்றியமையாதவராகவும், யாவரும் மகிழ்ந்து அவரைப் போற்றிடும் தன்மைகளை உடையவராகவும், பாடம் சொல்லும் காலத்தில் முகம் மலர்ந்து கற்பிக்கும் இயல்பு உடையவராகவும் இருக்கவேண்டும். இவ்விடத்தில் 'பொழுதின்' எனும் சொல்லுக்கு எப்பொழுதும் முகம் மலர்வுடையராக ஆசிரியர் இருத்தல் வேண்டும் எனும் பொருளாய்க் கொள வேண்டும் என்பது அடியேன் எண்ணம்.

நல்ல ஒரு ஆசிரியருக்கு எடுத்துக்காட்டுகள் வழங்கியாயிற்று. நிறைகோல் தன்மையுடன் யாரெல்லாம் ஆசிரியர் ஆகத் தகுதியற்றவர் என்பதையும் அவர்களின் குணங்கள் மற்றும் சுவையான தகுந்த எடுத்துக்காட்டுகளுடனும் ஆசிரியர் முன்வைப்பதைக் காண்போம்.

மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவா வஞ்சம் அச்சம் ஆடலும்
கழல்குடம் மடல்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோர் இலர் ஆசிரியர் ஆகுதலே

தாம் கற்றதைத் தெளிவாக மற்றவர்கள் புரிந்து கொள்ளும் அளவுக்குப் பாடம் சொல்லும் அறிவும், குணமும், ஆர்வமும் இல்லாதவர் (மொழிகுணம் இன்மை), அறத்தின் வழி இல்லாத இழிந்த குணத்தை இயல்பாகக் கொண்டவர், யாரேனும் அறிவுடையராக இருந்தால் அவர் மேல் பொறாமை கொள்பவர், ஆசை அதிகமுடையவர், மெய்ப்பொருளைக் காட்டாது பொய்யாக வஞ்சம் கொண்டவர், அஞ்சத்தகாதவற்றுக்கு அஞ்சுபவர், மேற்கண்ட பொறாமை, ஆசை, வஞ்சனை, அச்சம் ஆகியவற்றை மற்றவர்களுக்கு ஊட்டுபவர் (ஆடலும்) ஆகியோர் ஆசிரியராகத் தகுதியற்றவர் ஆகின்றார். அவர்கள் கழல்குடம், மடல்பனை, பருத்திக் குண்டிகை மற்றும் முடத்தெங்கு ஆகிய நான்கினுக்கும் ஒப்பாக முரண் கொள்கின்ற சிந்தை உடையராக இருப்பர்.

மொழி குணம் இன்மையும் - பாடம் சொல்லும் குணம் இல்லாமையையும் , இழிகுண இயல்பும் -இழிகுணம் ஆகிய இயற்கையையும் , அழுக்காறு - பிறருக்கு வரும் கல்வியைக் குறித்துக் கொள்ளும் பொறாமையையும் , அவா-பொருளின் மேல் அதிகமாக வைக்கும் ஆசையையும் , வஞ்சம் - மெய்ப் பொருளை மறைத்துப் பொய்ப் பொருளைக் காட்டி வஞ்சித்தலையும் , அச்சம் ஆடலும் - கேட்போருக்கு அச்சம் உண்டாகப் பேசுதலையும் , கழற்குடம் , மடல் பனை , பருத்திக் குண்டிகை , முடத்தெங்கு ஒப்புஎன - கழற் குடமும் மடல்பனையும் பருத்திக்குண்டிகையும் , முடத்தெங்கும் ஆகிய நான்கனையும் ஒப்பு என்று சொல்ல , முரண்கொள் சிந்தையும் உடையோர் - மாறுபாடு கொண்ட கருத்தையும் தம்மிடத்தில் உடைவர் , ஆசிரியர் ஆகுதல் இலர் - கற்பிக்கும் ஆசிரியர் ஆகுதல் இலர் ஆவர் .

தகுதியற்ற ஆசிரியர்களுக்குத் தகுதியான எடுத்துக்காட்டுகளைச் சுவையாகக் காட்டுகின்றார் ஆசிரியர். இவையனைத்தையும் இன்றைய காலகட்டத்தில் புரிந்து கொள்ள நாம் கால இயந்திரத்தில் ஆசிரியரின் காலமான 12ம் நூற்றாண்டுக்குப் பயணிப்போம்!

பெய்தமுறை அன்றிப் பிறழ உடன் தரும்
செய்தி கழல்பெய் குடத்தின் சீரே

கழற்காய் அல்லது கழற்சிக்காய் என்று பொதுவான பெயரும் வஜ்ரபீடம் என்று மூலிகைப் பெயர் கொண்டதாகவும் உருண்டையாக அன்று தட்டாங்கல் எனப்படும் கழங்காடுதல் விளையாட்டுக்குப் பயன்பட்டதாகவும் இலக்கியங்களில் எடுத்தாளப்படுவது இந்த கழற்காய். (படத்தில் காட்டப்பட்டுள்ளது.)

செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்

என அன்றைய மகளிர் இந்தக் கழற்காய்களை எற்றி விளையாடினார்கள் என்கின்றது புறநானூறு.

அத்தகைய மொழுமொழுவென்று வட்ட வடிவிலிருக்கும் கழற்காய்களை ஒரு குடத்தில் போட்டு வைத்தால் அதில் போடுகின்ற வரிசைப்படி அதை எடுக்க வழியிருக்குமா? அதாவது முதலில் போட்ட கழற்காயை முதலில் நம்மால் எடுக்க முடியுமா? அனைத்தும் வரிசை மாறிவிடும் அல்லவா? அதே போல் தகுதியில்லாத ஒரு ஆசிரியர் தான் கற்ற வரிசையை மறந்து முதலில் சொல்ல வேண்டியதைக் கடைசியிலும், கடைசியில் சொல்வதை முதலாகவும் சொல்லித் தானும் குழம்பி மாணவரையும் குழம்ப வைத்து விடுவார்! அதனால் பெய்த முறை இன்றிப் பிறழ்ந்து விடும் குணம் கொண்ட குடத்தினை நேர்வைத்தது எத்தனை பொருத்தமாக உள்ளது?

தானே தரக்கொளின் அன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா இடத்தது மடல்பனை

கூர்மையான கருக்கு மடல்களுடைய பனைமரமானது தானே தன்னிடம் உள்ள பழங்களையும் காய்களையும் உதிர்த்தால்தான் நாம் அதைப்பெற்றுக் கொள்ளமுடியும். மாறாக அவற்றை மரத்தில் ஏறி பறித்துக்கொள்ளல் என்பது இயலாத செயலாகும்.

சில ஆசிரியர்களும் அவ்வாறே, அவர்களாக முன்வந்து பாடம் நடத்தினால் தான் உண்டு. யாரேனும் அவரிடம் நெருங்கி ஆர்வத்துடன் வந்து கேட்கவே முடியாத இடத்திலும் இயல்பிலும் இருப்பவர் எவ்வாறு மாணவர்கள் விரும்பும் ஆசிரியராக இருத்தல் இயலும்? சரி தானே?

அரிதின் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு
எளிது ஈவு இல்லது பருத்திக் குண்டிகை

இது தகுதியற்ற ஒரு ஆசிரியருக்கு அருமையான உவமானம்! சிலர் தாம் மாணவர்களாகக் கற்கும் போதும் மிகவும் வரு(த்)ந்திக் கற்றிருப்பார்கள். அவரே ஆசிரியரான பின்னர் அதைச் சொல்லிக் கொடுக்கும் போதும் படுத்தி எடுப்பார்கள்! இது எவ்வாறிருக்கின்றது என்றால், வயிறகன்ற வாய்குறுகிய ஒரு குடுக்கையில் (இன்றைய வேதியியல் சோதனைச் சாலையில் காணமுடிகின்றது.) பஞ்சினைக் குச்சி கொண்டு உள்ளே செலுத்துவதும், பின்னர் அதே குடுக்கையிலிருந்து பஞ்சினை வெளியே எடுப்பதும் எவ்வளவு கடினமோ அதை ஒத்ததாக இருக்கின்றது. எனவே அரிதின் பெயக்கொண்டு (உள்ளே செலுத்துவதும்) எளிதில் ஈவு இல்லாத (எளிதில் வெளியே எடுக்க முடியாத) பருத்திக் குண்டிகை எனப்படும் குடுக்கை தகுதியற்ற ஆசிரியருக்கு எத்தனை பொருத்தமானது?

பல்வகை உதவி வழிபடு பண்பின்
அல்லோர்க்கு அளிக்கும் மது முடத்தெங்கே

என்ன இது? தென்னை மரத்தைத் தகுதியற்ற ஒரு ஆசிரியருக்கு உவமானமாகச் சொல்வதா? தென்னை எத்தனை பெருமையுடையது?

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி
'என்று தருங்கொல்?' என வேண்டா- நின்று
தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

என ஓவை கூடத் தம் மூதுரையில் கடவுள் வாழ்த்துக்கு அடுத்த பாடலாகத் தென்னையை உயர்வாகச் சொல்லவில்லையா? காலில் எந்நீரை ஊற்றினாலும் பின்னாளில் தலையாலே நன்னீரைத் தரும் தென்னை என்று புகழ் பாடவில்லையா? எனும் ஐயம் எழுகின்றது தானே?

இங்கே நூலாசிரியர் குறிப்பிடுவது மேற்கூறிய தளராமல் நேராய் வளரக்கூடிய தென்னை மரத்தை அல்ல! தன் வேலியிலிருந்து வெளியே காய்த்துப் பல(ய)ன் தருகின்ற முடத்தெங்கைத் தான் குறிப்பிடுகின்றார்! அதென்ன முடத்தெங்கு? நேராக வளராமல் வேலிக்கு அப்புறமாக வளைந்து உடையாருக்கு இல்லாமல் யாருக்கோ பலனளிப்பது முடத்தெங்கு. அது போல ஆசிரியர்கள் தம்மை அண்டிப் பல வகை உதவியும் வழிபாடும் செய்யும் பண்பில் அல்லாதோருக்குப் பாடம் நடத்துபவராக இருக்கக் கூடாது என்கின்றார் நன்னூல் ஆசிரியர். இதன் மூலம் ஆசிரியருக்கு மட்டுமின்றி ஒரு ஆசிரியரை எவ்வாறு மாணவர்கள் வழிபாடு செய்தல் வேண்டும் எனும் உட்பொருளும் காணக் கிடைக்கின்றது.

ஆசிரியர்களில் நல்லாசிரியர் தகுதியற்றவர் எனும் பாகுபாடு கண்டோம். இனி மாணவர்களிலும் இது போன்றவர்கள் உண்டா எனும் கேள்விக்கான பதிலை அடுத்த பகுதியில் காண்போம்!

பாடஞ்சொல்லல்:

ஓர் ஆசிரியர் எவ்வாறு பாடத்தைச் சொல்லித் தரவேண்டுமென நன்னூல் ஆசிரியர் பாடஞ்சொல்லலின் வரலாற்றில் குறிப்பிடுகின்றார். அப்பாடலை முதலில் கண்டு பின்னர் மாணாக்கர்களின் வரலாற்றிற்கு வருவோம்!

ஈதல் இயல்பு ஏ இயம்பும் காலை
காலம் உம் இடன் உம் வாலிதின் நோக்கி
சிறந்த உழி இருந்து தன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகம் மலர்ந்து
கொள்வோன் கொள் வகை அறிந்து அவன் உளம் கொள
கோட்டம் இல் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப

ஆசிரியர் பாடஞ் சொல்வதன் இலக்கணத்தை முதற்சொல்லின் வாயிலாகவே எவ்வாறு உணர்த்துகின்றார் பவணந்தியார்?! ஈதல் என்று அல்லவா ஆரம்பிக்கின்றார். ஆம்! ஆசிரியர் அன்புடன் பாடஞ்சொல்வது ஒரு சிறந்த தானத்துக்குச் சமமானது தானே?

ஈதலின் (பாடஞ் சொல்லிக் கொடுத்தலின்) இயல்பானது, உரிய காலம், உரிய இடம் ஆகியவற்றைத் தூயனவாகத் (வாலிதின்) தேர்ந்தெடுத்து அதில் சிறந்த இடத்தில் இருந்து தான் வழிபடும் தெய்வம் (உற்று நோக்குங்கள் - எந்த தெய்வம் என்று சொல்லவில்லை! அவரவர் வழிபடும் தெய்வத்தைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர்!) வணங்கி கடவுள் வாழ்த்து சொல்லி, தாம் விளக்கவிருக்கும் பாடத்தினை முதலில் தான் உணர்ந்து உள்ளத்துள் இருத்தி ஆரம்பிக்க வேண்டும். எத்தனை ஆழ்ந்த மனவியல் இவ்வரிகளில் இருக்கின்றது?

அடுத்ததாக, பொறுமையைக் கடைப்பிடித்து (பாடத்திட்டத்தை முடிக்க வேண்டுமே என்று!) விரைந்தும் சொல்லிக் கொடாமல் (விரையான்), கோபமும் படாமல் (வெகுளான்) அகமிக விரும்பி முகமும் மலர்ந்து மாணாக்கர்களின் புரியும் தன்மையையும் அவர்களின் வளர்ச்சி நிலையும் அறிந்து அவர்களின் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து எந்த வித கோட்டமும் (கோணலும்) இன்றி அவர்களின் உள்ளத்தில் நிலை கொள்ளுமாறு பாடஞ் சொல்லிக் கொடுத்தல் வேண்டும் என்கின்றார்.

ஆசிரியர்கள் எவ்வாறு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதை இதை விட எளிமையாகவும், சுருக்கமாகவும் வேறெங்கு காண முடியும்?

மாணாக்கனது வரலாறு:

ஆசிரியர் நாணயத்தின் ஒருபக்கம் எனில் மாணவர் மறுபக்கம் அன்றோ? இனி ஒரு மாணவர் எவ்வாறிருத்தல் அவசியம் என்று நன்னூலில் கூறப்பட்டிருக்கின்றது என்று காணலாம்!

தன் மகன் ஆசான் மகன் ஏ மன் மகன்
பொருள் நனி கொடுப்போன் வழிபடுவோன் ஏ
உரைகோளாளன் கு உரைப்பது நூல் ஏ

ஓர் ஆசிரியர் எத்தகைய மாணவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தல் வேண்டும் என்று சொல்வதன் மூலம் மாணவர்களின் தகுதியைக் குறிப்பாகச் சுட்டுகின்றார் பவணந்தியார்.

தனது மகன், தனது ஆசிரியரின் மகன், மன்னனின் மகன், பொருள் நன்றாகக் கொடுத்துக் கற்க வருபவன், தன்னை வழிபடுபவன், தனது பாடத்தைக் கற்கும் ஆவலுடன் விரைந்து கற்க ஆர்வமுடையவன் ஆகிய ஆறு பேருக்கும் ஆசிரியர் பாடத்தை உரைக்க வேண்டும் என்கின்றார். நாம் முதல் நான்கினுள் வராவிடினும் பின்னிருக்கும் இரண்டு தகுதிகளைக் கொள்ளலாம் அல்லவா?!

அன்னம் ஆ ஏ மண் ஒடு கிளி ஏ
இல்லி குடம் ஆடு எருமை நெய் அரி
அன்னர் தலை இடை கடை மாணாக்கர்

வெறும் மூன்றே வரிகளில் எட்டு எடுத்துக்காட்டுகளைக் கொண்டு மூன்று விதமாக மாணவர்களைத் தரம்பிரிக்கும் நேர்த்தி தான் நன்னூலின் ஆகச் சிறந்த சிறப்பு! அன்றிலிருந்து இன்று வரை மாணவர்களின் இயல்பு இப்படித் தானிருக்கின்றது என்பதை நான் பாடம் கற்ற காலத்திலிருந்து இன்று பாடஞ் சொல்லிக் கொடுக்கும் காலம் வரை உணர்ந்து வியக்கின்றேன்.

தலை மாணவர்கள்:

சிறந்த மாணவர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளாக அன்னப் பறவையையும், பசுவையும் காட்டுகின்றார் ஆசிரியர். காரணம் யாதெனக் காண்போம்.

இவ்விடத்தில்,

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல ரூ தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

எனும் நாலடியார் பாடலையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதிலும் அன்னப் பறவையும் கல்வியும் குறிப்பிடப்படுகின்றது. கல்வி கரையற்ற கடலைப் போன்றது. நமது வாழ்நாளோ மிகவும் குறுகியது. அதிலும் பல நாட்கள் பிணியில் சென்று விடுகின்றது. எனவே நாம் எதைக் கற்றல் அவசியம் என்று எவ்வாறு அன்னப்பறவையானது நீரும் பாலும் கலந்த கலவையிலிருந்து நீரை ஒழித்து நீக்கிச் சிறந்த பாலை மட்டும் அருந்துகின்றதோ அதைப் போல் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும் என்று விளக்குகின்றது நாலடியார்.

ஆசிரியர் தனது பாடத்தின் போது பாடத்தை விளக்கும் காரணம் கொண்டும் மாணவர்களுக்குப் புரிய வேண்டும் என்றும் ஆர்வத்தைத் தூண்டுவதற்காகவும் பல உலக வழக்கங்களையும் எடுத்துக்காட்டுகளையும் சுவைபடவும், நகைச்சுவையாகவும் சொல்லக்கூடும். அதில் எது முக்கியம் மற்றும் எது சிறந்ததோ எது தேவையோ அதை மட்டும் அன்னப்பறவை போல் பிரித்து எடுத்துக் கொள்ளும் தன்மை மிக்கோரை அன்னம் என்றும் தலை சிறந்த மாணாக்கர் என்றும் குறிப்பிடுகின்றார் பவணந்தியார்.

பசுவின் தன்மையைக் காண்போம். இருப்பதிலேயே பசு சாதுவான விலங்கு. அது போல மிகவும் பொறுமையாகவும் சாதுவாகவும் இருப்பவர்கள் தலை மாணாக்கர்கள். பசு புல்லை மேயும் போது கிடைக்கும் இடத்தில் மிகவும் விரைவாகவும் அதிக அளவிலும் உட்கொள்ளும். பின்னர் சாவகாசமாக இருக்கும் போது நிதானமாக மெல்ல மெல்ல அசைபோடும். அது போல ஆசிரியருடன் இருக்கும் போது அவரது நேரத்தை வீணடிக்காமல் விரைந்து கற்று, பின்னர் இல்லத்திருக்கும் போது மீண்டும் அதை நினைவுபடுத்திப் பயிற்சி செய்து தாமும் மெனக்கெட்டுக் கற்றுணர்வார்கள் தலை மாணாக்கர்கள் என்று பொருள்.

மண்ணொடு கிளியே என்று நிலத்தையும் கிளியையும் இடைநிலை மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக இயம்புகின்றார் ஆசிரியர்.

நிலத்தை ஆசிரியருக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறியிருப்பதை மறக்கக் கூடாது. ஏனென்றால் நிலத்தின் பொறுமை அளவிற்கரியது. ஆனால் நிலத்தின் மற்றொரு பண்பானது; அதை எவ்வளவு சீர்திருத்தம் செய்து பராமரித்து ஆழ உழுகின்றோமோ அவ்வளவே பலன் தரும். ஆக, ஆசிரியரானவர் எவ்வளவு சொல்லித் தருகின்றாரோ அவ்வளவு மட்டுமே கற்றுக் கொண்டு, தாமாக எதையும் மேற்கொண்டு கல்லாதவர்கள் இடைநிலை மாணவர்கள் ஆவார்கள்.

கிட்டத்தட்ட இதே பொருளையே கிளி எடுத்துக்காட்டிலும் காணலாம். சொல்வதைச் சொல்வது கிளி. சொல்வதை மட்டுமே திருப்பிச் சொல்வது கிளி. அதற்கு தான் சொல்வதன் பொருள் புரிந்து சொல்கின்றதா என்பது சந்தேகத்துக்கு இடமானது. அதே போன்று தாமாக

எதையும் கற்றுணராது, ஆசிரியர் சொன்னதை மட்டும் சொன்னபடி செய்வது இடைநிலை மாணவர்களின் நிலை.

இனி கடைநிலை மாணவர்களைக் காண்போம். அவர்களுக்கு மாத்திரம் நான்கு உவமைகளை முன்வைக்கின்றார் ஆசிரியர். காரணம் என்ன? தலை மற்றும் இடைநிலை மாணவர்கள் குறைவாகவும், கடைநிலை மாணவர்களே நிறைய பேர் இருப்பதுவும் காரணமாக இருக்குமோ? நிச்சயம் அவ்வாறில்லை! நிறைய உவமைகளை எடுத்துக்காட்டுவதன் மூலம் எவ்வாறெல்லாம் இருக்கக் கூடாது என்பதை அறிந்து கொள்ளலாம் என்பதற்காக.

கடைநிலை மாணவர்களுக்கு இல்லிக்குடம், ஆடு, எருமை நெய்யரி (பன்னாடை) ஆகியன எடுத்துக்காட்டப்படுகின்றது.

இல்லிக்குடம் - எவ்வளவு பெரிய குடமாக இருந்தாலும் அதன் கீழ்ப்பகுதியில் ஒரு இல்லியளவு ஓட்டை இருந்தாலும் அதில் நீர் தங்காது. அது போலவே ஆசிரியரிடம் எவ்வளவு பாடம் கற்றாலும் அதை மனத்தில் தேங்க விடாது ஒழுக விட்டு வெறுங்குடம் ஆக இருப்பவர்கள் கடைநிலை மாணவர்கள்.

ஆடு - ஆடு எப்போதுமே நுனிப்புல்லை மட்டுமே மேய்ந்து வயிறு நிறையாமல் அலையும் பண்புடையது. அது போல எதிலும் ஆழமாகக் கற்காமல் ஓர் ஆசிரியரிடமும் நிறைவாகக் கற்காமல் இவரிடம் செல்வதா அவரிடம் செல்வதா என்று அலைந்து திரிந்து கடைசியில் எதையும் கற்காமல் நுனிப்புல் மேய்பவர்களைக் கடைநிலைப் பட்டியலில் சேர்க்கின்றார் ஆசிரியர்.

எருமை - எருமையின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ?! யார் என்ன செய்தாலும் அதைப் பற்றிய சட்டையே செய்யாமல் எனக்கென்ன என்று எவ்வித முயற்சியிலும் ஈடுபடாமல் எருமை போலிருப்பவர்களைக் கடைநிலை மாணாக்கர்களுக்கு உவமையாகக் காட்டுகின்றார் ஆசிரியர். அதுமாத்திரமல்ல. குளத்து நீரைக் கலக்கிச் சேறும் சகதியுமாக்கிய பின்னர் அதைப் பருகும் இயல்புடையது எருமை. அதுபோல கடை மாணாக்கர் ஆசிரியரின் மனத்தை வருத்தி நோகடித்து கல்வி கற்பவர்களாகவும் இருப்பர்.

நெய்யரி - இது என்ன புதுச் சொல்லாக இருக்கின்றது? நெய்யரி என்றால் பன்னாடை என்பது பொருளாகும். ஆம்! பொதுவாக வசைபாடும் சொல்லாக இருக்கும் பன்னாடை என்பது தான் நெய்யரி. பனைமட்டையோடு ஒட்டி இருக்கும் சல்லடை போன்ற பகுதியை அவ்வாறு அழைப்பார்கள். கீழே படத்தில் காணலாம்.

நெய்யரி - பனைமட்டை - பன்னாடை

பனை மரத்திலிருந்து கள்ளை எடுக்கும் போது சல்லடை போல் அதைப் பயன்படுத்துவார்கள்! பனை மட்டையைத் தாங்கியிருக்கும் பன்னாடையில் கள்ளை வடிகட்டும்போது அது தேவையான கள்ளை விடுத்து தேவையற்றதைப் பிடித்துக் கொள்வது

போலக் கடை மாணாக்கர் தேவையானவற்றை விட்டுவிட்டுத் தேவையற்றதைப் பிடித்துக் கொள்ளும் இயல்புடையவர்களாய் இருப்பர்.

புடைக்கும் முறமானது நல்லவற்றை வைத்துக் கொண்டு அல்லவற்றை விட்டுவிடும். சல்லடையானது நல்லவற்றை விட்டு விட்டு அல்லவற்றை வைத்துக் கொள்ளும்.

பாடத்திலிருக்கும் சிறந்த அறத்தைக் கொள்ளும் அன்னப்பறவைகளாய் தலை மாணவர்களையும், மறத்தைக் கொள்ளும் நெய்யரிகளாய் கடைநிலை மாணவர்களையும் தரம் பிரித்துக் காட்டப்படுகின்றது.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தாம் தறுதலையாக இல்லாமல் ஒரு தலை மாணவராகச் சிறந்து விளங்கி, தமக்கும், தம் குடும்பத்தாருக்கும், தம் ஆசிரியருக்கும் பெருமை சேர்ப்பவராக இருத்தல் வேண்டும்.

இனி, யாரெல்லாம் மாணவர்களாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்று ஒரு பட்டியல் இடுகின்றார் ஆசிரியர். அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் கல்வியானது அவர்களை மட்டுமின்றி அவர்கள் சார்ந்த சமூகத்துக்கும் பயனளிக்காமல் வீணாகப் போய்விடும் என்ற கவலையும் அதனால் விளைந்த அச்சமும் இப்பட்டியலை இட வைத்திருக்கின்றது. இதிலிருந்து கல்வி கற்க சாதி, மதம், இனம், மொழி, வயது ஆகியவை தகுதியாகக் கொள்ளப்படாது என்றும், கீழே காணப்படும் குணமில்லாதோர் யாவராயினும் அவர் கல்வி கற்கத் தகுதியானவர் என்றும் அறிந்து கொள்ளலாம்.

களி மடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொல் நூல் கு அஞ்சி
தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி
படிறன் இன்னோர் கு பகரார் நூல் ஏ

1. கள்ளுண்டு களிப்பவன் (களி),
2. சோம்பல் உடையவன் (மடி- மடையன்),
3. தன்னைத் தானே பெருமை பேசிக்கொள்பவன் (மானி),
4. காமுகன் (காமி),
5. கள்வன்,
6. நோயாளி (பிணியன்),
7. அறிவில் ஏழையானவன் (ஏழை),
8. சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாகக் குணம் மாறுபடப் பேசுபவன் (பிணக்கன்),
9. சினமுடையவன்,
10. விழிப்புணர்வு அற்றவன் - அதிகமாகத் தூங்குபவன் (துயில்வோன்),
11. மந்த புத்திக்குச் சொந்தக்காரன் (மந்தன்),
12. அரிய (தொல்) நூல்களைக் கற்க அஞ்சித் தடுமாறும் உள்ளமுடையவன்,
13. இரக்கமே இன்றி, அஞ்சவேண்டிய செயல்களுக்கு அஞ்சாதவன், (தறுகணன்)
14. பாவத்தைச் செய்யும் இயல்பு கொண்டவன்,
15. பொய் பேசுபவன்

ஆகிய பதினைந்து வகைப்பட்டவர்களும் மாணாக்கர் ஆவதற்குத் தகுதியற்றவர்கள் என்று பட்டியலில் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் நன்னூல் ஒரு மொழியிலக்கண நூல் மட்டும் அன்று, அறவழி காட்டும் சிறந்த அற நூலாகவும் விளங்குகின்றது என்பதைக் காண முடிகின்றது.

மேற்கண்ட பதினைந்தும் பக்கத்தில் கூட வரவிடாமல் ஒழுக்க சீலர்களாக விளங்கும் மாணவர்களுக்குத் தோல்வி ஏது?

பாடம் கேட்டல்:

மாணவர்களின் தலையாய கடமைகளில் ஒன்று பாடம் கேட்டல். ஆசிரியர் நடத்தும் போது பாடத்தைச் சரியாகக் கவனிப்பது மாணவரின் அறிவுப் பெட்டகத்தைத் திறக்கும் திறவுகோல் என்பதில் ஐயமில்லை. அதை பவணந்தி முனிவர் எவ்வாறு வரையறுக்கின்றார் என்று காண்போம்.

பாடம் கேட்டலின் வரலாறு:

கோடல் மரபு ஏ கூறும் காலை
பொழுது ஒடு சென்று வழிபடல் முனியான்
குணத்து ஒடு பழகி அவன் குறிப்பின் சார்ந்து
இரு என இருந்து சொல் என சொல்லி
பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகி
சித்திர பாவை இன் அ தகவு அடங்கி
செவி வாய் ஆக நெஞ்சு களன் ஆக
கேட்டவை கேட்டு அவை விடாது உளத்து அமைத்து
போ என போதல் என்மனார் புலவர்

ஒரு மாணவன் ஆசிரியரிடம் எவ்வாறு பாடம் கேட்க வேண்டும் என்றால்,

- உரிய காலத்தில் (பொழுதோடு) சென்று ஆசிரியரை வழிபடல் வேண்டும்
- சிறிதும் வெறுப்பு இல்லாதவனாகி (முனியான்), பண்பான குணத்தோடு பழகுதல் வேண்டும்.
- ஆசிரியரின் குறிப்பினை அறிந்து, அவர் இரு என்றால் இருந்து, சொல் என்றால் சொல்லி ஆசிரியரை அப்படியே அடியொட்டி நடக்க வேண்டும்.
- அடங்காத பசி உடையவன் எவ்வாறு சோற்றைக் கண்டதும் ஆர்வமுடையவனாக உண்பானோ அதே ஆர்வத்தோடு பாடத்தைக் கேட்க வேண்டும்.
- ஒரு சித்திரத்தில் வரைந்த பாவையைப் போல் ஆடாது அசையாது அடக்கமுடன் இருத்தல் வேண்டும்.
- காதுகளை வாயாகக் கருதி, நெஞ்சம் கொள்கின்ற இடமாகக் கருதி கேட்டவை யாவையும் சிறிதும் சிந்தாமல் சிதறாமல் உள்ளத்திலே அமைத்துக் கொள்ள வேண்டும்.
- ஆசிரியர் (நீ என்னிடம் கற்றது போதும் இனி, மேலும் கற்கவோ அல்லது கற்பிக்கவோ) போ என்று சொன்னால் கிளம்பி விட வேண்டும்.

என்று சொல்வார்கள் அரும்புலவர்கள் என்கின்றார்.

அடுத்ததாக ஒரு நூலைக் கற்பவர் எவ்வாறு பயில வேண்டும் என்று எக்காலத்துக்கும் தகுந்தவாறு எளிய ஏழு முறைகளைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். அனைவரும் எளிதாகப் பின்பற்றக் கூடியதான வழிமுறைகளைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பது இந்தத் தொடரின் முக்கிய நோக்கமாகும். அந்த வகையில் இத்தொடரின் ஆணிவேர் அல்லது அச்சாணி என்று இப்பகுதியைக் குறிப்பிடலாம்!

நூல் பயில் இயல்பு ஏ நுவலின் வழக்கு அறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசான் சார்ந்து அவை அமைவர கேட்டல்
அ மாண்பு உடையோர் தம் ஒடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்ற இவை
கடன் ஆ கொளின் ஏ மடம் நனி இகக்கும்

நூலைப் பயிலும் இயல்பினை உரைக்க வேண்டுமாயின்

1. வழக்கு அறிதல்
2. பாடம் போற்றல்
3. கேட்டவை நினைத்தல்
4. ஆசான் சார்ந்து அவை அமைவர கேட்டல்
5. அம்மாண்புடையோர் தம்மோடு பயிறல்
6. வினாதல்
7. வினாயவை விடுத்தல்

எனும் இவைகளைக் கடமையாகச் செய்தால் அறியாமை மிகவும் விலகிவிடும் (இகக்கும்) என்கின்றார்.

ஏற்கனவே ஆசிரியர் ஓரிடத்தில் முன்பு குறிப்பிட்டதை இவ்விடத்தில் நினைவு கூர்ந்து பின் இவ்வழிகளை விளக்க முற்படுகின்றேன். நூலுக்கு ஏன் நூல் என்று பெயர் வந்தது எனும் பெயர்க்காரணம் கூற முற்பட்ட பவணந்தியார் **"உள்ளிய தீமை புரத்தின் வளம் முருக்கி"** என்று அறியாமையும் வளரும் தன்மையுடயது என்று கூறியுள்ளார் என்று கண்டோம். அறிவு வளர்வதைப் போலவே அறியாமையும் வளர வல்லது! அத்தகைய அறியாமையை வளரவொட்டாமல் தடுத்து விட்டோமேயானால் அறிவு மட்டுமே வளரும் அல்லவா? அதற்கான வழிமுறைகள் தான் மேலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இனி அவற்றை விளக்கமாகக் காணலாம்.

1. வழக்கு அறிதல்:

எந்த ஒரு பாடத்தைப் பயில முற்படும் போதும் அதன் உலக வழக்கம் என்னவாயிருக்கின்றது? எங்கு செயல்படுகின்றது? எவ்வாறு செயலாக்கம் பெறுகின்றது? என்று அறிந்து கொள்தல் அப்பாடத்தை மறவாமல் இருப்பது மட்டுமின்றி அதை நாமும் வழக்கத்துக்குக் கொண்டு வருதற்கு ஏதுவாக இருக்கும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது எனும் பழமொழியை நினைவில் கொள்ளவேண்டும். நாம் கற்கும் கல்வியின் உலகாய வழக்கத்தினை அறிந்து அதைப் பலவித எடுத்துக்காட்டுகளுடன் பயில வேண்டும்.

எடுத்துக்காட்டாக: ஒரு வணிகவியல் மாணவர் கணிதத்தில் (Geometric Progression) பெருக்குத் தொடரைப் பற்றிக் கற்கின்றார் என்று கொள்வோம். அதன் உலக வழக்கமான (Term loan) காலவரை/தவணைக் கடன் பற்றி அறிந்து கொண்டாரேயானால் தனது வாழ்நாளில் அதை மறக்க மாட்டார்!

2. பாடம் போற்றல்:

நாம் கற்கின்ற நூலை உயிருக்கும் மேலாகப் போற்றி அதைக் கற்க வேண்டும். நம்முடைய கவனம் சிதறாமல் அதில் குறிப்பிட்டிருக்கும் சொற்களின் மற்றும் சொற்கோர்வைகளின் விளக்கங்கள் குறித்துத் தேடிக் கற்க வேண்டும். தேர்வுக்காக நூலின் சில பகுதிகளுக்கு மட்டும் முன்னுரிமை கொடுத்து சில பகுதிகளை உதாசீனம் செய்யக் கூடாது. இந்த நூலிலிருந்து தான் கேள்விகள் கேட்கப்படும் என்று அறிந்த பின்னரும் வேறு பல நூல்களை எளிதென நினைத்து அவற்றைப் பின்தொடரும் மாணவர்களை இன்று காண்கின்றோம்.

முதல் நூலிலிருக்கும் எண்ணவோட்டமும் தொடர்ச்சியும் வேறெந்த நூலிலும் இருக்கின்றதா என்பது சந்தேகமே! எனவே பாடத்தைப் போற்றுவோம்! பாடத்தைப் போற்றுவோம்!

3. கேட்டவை நினைத்தல் (Review)

அந்த நூலைப் பற்றி ஆசான் கூறும் போதும், மற்றெவர் கூறும் போதும் கவனமாகக் கேட்கவேண்டும். அவ்வாறு கேட்பதைப் பின்னர் நினைத்துப் பார்த்தல் மிகவும் அவசியமாகும். முதல் தரமான மாணவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது நமது ஆசிரியர் பசுவினை எடுத்துக்காட்டியதை இவ்விடத்தில் நினைவூட்டுகின்றேன். பசு அசைபோடுவது போல நினைத்துப் பார்க்க வேண்டும்.

நூலைப் போற்றிக் கற்றல் - காட்சி (View)
பின் கேட்டவை நினைத்தல் - மதிப்பாய்வு (Review)
தேர்வில் இதே கேள்வி வந்தால் நாம் எவ்வாறு பதில் எழுதலாம் என்று திட்டமிடுதல் - முன்னோட்டம் (Preview)

ஆகிய மூன்றையும் மாணவர்கள் கைக்கொள்ள வேண்டும்.

4. ஆசான் சார்ந்து அவை அமைவர கேட்டல்:

பாடத்தை நாமாகக் கற்பது பயனளிக்கும் என்றாலும் பலவித ஐயங்கள் எழக் கூடும். அவற்றைத் தகுந்த ஆசிரியரிடம் நாம் முந்தைய பகுதியில் குறிப்பிட்டது போலக் கவனமாகக் கேட்டல் அடுத்த நிலையாகும். ஆசிரியர் காந்தம் அல்லவா? நாமும் அவரைச் சார்ந்து பாடத்தைப் பயிலும் போது இரும்பாக இருக்கும் நாமும் காந்தமாகும் வாய்ப்பு ஏற்படும். பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும்.

5. அம்மாண்புடையர் தம்மோடு பயிறல்: (Group Study)

தற்காலத்தில் மிகவும் முக்கியமானதாகவும் பயனுள்ளதாகவும் கருதப்பட்டும் குழுவாகச் சேர்ந்து கற்பதைக் குறித்து எத்தனை ஆண்டுகளுக்கும் முன்பே ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதைப் பாருங்கள்! நமது எண்ண அலைகளை ஒட்டி நம்முடனே தொடர்ந்து பயணிக்கும் நமக்குச் சமமான மாணவர்களுடன் சேர்ந்து பயிறல் தனித் தனியே பயில்வதைக் காட்டிலும் பன்மடங்கு அனைவருக்கும் பயனளிக்கும். அது மட்டுமல்ல, நண்பர்களுடன் பாடம் பயிலும் போது பாடம் கற்பது ஒரு சுமையாகவும் தெரியாது. ஆனால் நண்பர்களுடன் பயிலும் போது பொன்னான நேரத்தை வீணடிக்காமல் கவனத்தைச் சிதறவிடாமல் குவித்துப் படித்தல் அவசியம்.

6. வினாதல்:

இதுகுறித்துச் சொல்லவும் வேண்டுமோ? பாடத்தில் நமக்கு எழும் சந்தேகங்களை எவ்விதத் தயக்கமும் இன்றி வினாவெழுப்ப வேண்டும். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற கவலைப் படவேண்டியதில்லை. நம்மைப் போலவே மற்றவர்களும் இதே தயக்கத்துடன் தான் இருப்பார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். வினா எழுப்புபவர்கள் அந்த ஒரு நொடியில் வேண்டுமானால் அறிவிலியாகக் கருதப்படலாம். ஆனால் வினா எழுப்பாதவர்கள் வாழ்நாள் முழுதும் அவ்வாறே இருந்து விடக்கூடும். எனவே பாடம் குறித்த வினாக்களை உடனுக்குடன் கேட்டுத் தெளிந்து விட வேண்டும்.

7. வினாயவை விடுத்தல்:

மேற்கூறியவாறு யாரேனும் வினா தொடுக்கும் போது அது குறித்து நமக்குத் தெரிந்திருக்குமாயின் அதை விடுவிக்கவும் முற்பட வேண்டும். வினாதலும் வினாவுக்கு விடையளித்தலுமே சிறந்த கல்வி முறையாகும். நாம் எவ்வாறு விடையளிக்கின்றோம், மற்றவர்கள் எவ்வாறு விடையளிக்கின்றார்கள் என்பதைத் தொடர்ந்து கண்ணுற்று, எது சிறந்தது என்று தேர்ந்து கொள்ளல் வேண்டும்.

இந்த ஏழு வழிமுறைகளையும் தவறாது தொடர்ந்து பின்பற்றினால் எந்த ஒரு பாடத்தையும் நூலையும் எளிதாகக் கற்றுணர முடியும்.

முந்தைய பகுதியில் அறியாமையை விலக்குவது எவ்வாறு என்பதைக் கற்றுணர்ந்தோம். அறியாமையை விலக்கினால் மட்டும் போதாதே? அறிவையும் வளர்க்க வேண்டும் அல்லவா? அதுபற்றி இப்பகுதியில் காண்போம்.

ஒரு குறி கேட்போன் இரு கால் கேட்பின்
பெருக நூலில் பிழைபாடு இலனே

ஆசிரியர் பாடத்தை நடத்தும் போது முதல் முறை கேட்கும் போது சில இடங்களைக் கவனிக்காமல் விடக் கூடும். எவ்விடம் முக்கியம் என அறியாதிருக்கக் கூடும். எனவே இரண்டாம் முறையும் கேட்டல் அவசியம் என்கின்றார் பவணந்தியார். அவ்வாறு இரண்டாம் முறையும் கேட்டால் பிழைபாடு நீங்கிக் கற்க முடியும். இன்றைய காலகட்டத்தில் நமக்கு யூடியூப் போன்ற நிகழ்நிலை அசைபடங்களின் மூலம் கற்க வாய்ப்பிருக்கின்றது. இரண்டு முறை என்ன? எத்தனை முறை வேண்டுமானாலும் மீண்டும் கண்டு கேட்டுக் கற்க முடிகின்றது. எனவே மாணாக்கர்கள் இதைக் கருத்தில் கொண்டு ஒரு முறையோடு நிறுத்திவிடாமல் இரண்டாம் முறையும் கற்க வேண்டும்.

முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்

இரண்டு முறை கேட்டலின் பயனை முன்பு பார்த்தோம். மூன்றாம் முறை படித்தால் என்ன கிடைக்கும்? அந்தப் பாடத்தை தானும் உணர்ந்து மற்றவர்களுக்கும் முறையறிந்து உரைக்கும் வன்மையை மாணாக்கர்கள் பெறுவார்கள் என்கின்றார் ஆசிரியர்! எனவே ஒரு பாடத்தை 1, 2, 3 என்று எண்ணிக்கையைக் கொண்டு படிக்காமல் பலமுறை கேட்டு உணர்ந்து சிந்திக்க வேண்டும் என்பதையே இவ்விடத்தில் நாம் காண்கின்றோம்.

ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும்

சரி. அவ்வாறு மூன்று முறை படித்துவிட்டால் போதுமா? ஆசிரியர் உரைத்ததை மனதில் இறுத்தி மேற்கண்டவாறு கற்று அமைவரக் கொண்டாலும் கால் பங்கு தான் படித்தவராவார் என்கின்றார்! அப்படியானால் மீதி முக்காற்பங்கு? அதற்கும் கணிதம் சொல்கின்றார் ஆசிரியர்.

அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்

தாம் கற்கும் அதே பாடத்தை ஆர்வத்தோடு பயிலும் மற்ற மாணவர் குழாமுடன் இணைந்து கூடிக் கற்கும் போது அடுத்த காற்பங்கு கிடைக்குமாம்! எத்துணை அருமையான மனவியலையும் Group Study என்று இன்றைய அறிவியல் குறிப்பிடும் கல்வி முறையையும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் குறிப்பிட்டிருக்கின்றார் பாருங்கள்!

மீதி அரைப்பங்கு அவைகளில் (இன்றைய Seminar - கருத்தரங்கு) சான்றோர் முன்னிலையில் உரைத்து விவாதிப்பதன் மூலம் கிட்டும் என்கின்றார் ஆசிரியர். அவ்வாறு கிடைக்கும் புலமை குற்றமற்றதாகவும் (மையறு) மாண்புடையதாகவும் நிறைவானதாகவும் இருக்கும் என்கின்றார். எனவே தாம் கற்ற கல்வி முழுமையடைய வேண்டும் என்று நினைப்பவர்கள் பல அரங்குகளில் உரையாடவும், விவாதிக்கவும் தயங்காது முன்வரவேண்டும்.

ஆசிரியரிடத்தில் மாணவன் எவ்வாறு பழக வேண்டும் என்பதையும் எவ்வாறு வழிபட வேண்டும் என்பதையும் கீழ்க்கண்ட நான்குவரிகளில் விளக்குகின்றார் ஆசிரியர்.

அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே

குளிர் வாட்டும் போது எவ்வாறு ஒருவன் நெருப்பாக இருந்தாலும் நீங்கி விடாமலும் அதே சமயம் அதை நெருங்கி விடாமலும் இருக்கின்றானோ அவ்வாறே மாணவன் ஆசிரியரிடம் மிகவும் நெருங்கியும் விடாமல், ஆசிரியர் கோபமுடையவராக இருக்கின்றாரே என்று விலகியும் விடாமல் இருத்தல் வேண்டும். எவ்வாறு நிழல் ஒருவரை விடாது தொடர்கின்றதோ அதே போல் நீங்காது ஆசிரியரைத் தொடர வேண்டும்.

அன்பு நிறைந்த நெஞ்சமோடு ஆசிரியர் மகிழும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். (எத்திறம் ஆசானுக்கு உவக்கும் அத்திறம்). அவ்வாறு மட்டுமின்றி அறத்தின் வழியிலிருந்து பிறழாமலும் நடந்து கொள்வது ஒரு மாணவன் ஆசிரியரை வழிபடும் முறையாகும்.

இத்துடன் நன்னூலின் பொதுப்பாயிரம் முற்றியது.

இனி ஒரு நூலின் சிறப்புப் பாயிரம் பற்றிக் காண்போம். அனைத்து நூற்களிலும் சிறப்புப் பாயிரம் இருப்பதில்லை என்பதை நாம் ஏற்கனவே கண்டோம்.

சிறப்புப் பாயிரத்திலக்கணம்:

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூல் பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயன் ஓடு ஆய் எண் பொருளும்
வாய்ப்ப காட்டல் பாயிரத்து இயல்பே

சிறப்புப் பாயிரம்:

- ஆசிரியர் பெயர் (ஆக்கியோன் பெயரே)
- நூல்வந்த வழி (வழியே)
- நூல் விளங்கும் நிலத்தின் எல்லைகள்.(எல்லை)
- நூலின் பெயர்
- நூலின் யாப்பு (தொகுத்து எழுதல், விரித்து எழுதல், இரண்டும் செய்தல், மொழிபெயர்த்தல் போன்றவற்றைச் சொல்லுதல்)
- நூற்பொருள்
- நூலை யார் படிக்கவேண்டும் (கேட்போர்)
- அவர்களுக்குக் கிடைக்கும் பயன் யாது? (பயன்)

ஆகிய எட்டும் சேர்ந்து சிறப்புப் பாயிரம் ஆகும் என்று நாம் ஏற்கனவே முதற்பகுதியிலேயே கண்டோம். இனி தொடர்வோம்.

காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே

நூலை உருவாக்கிய காலமும், அதை அரங்கேற்றிய களமும் (சபையும்), நூலை உருவாக்கிய காரணம் ஆகிய மூன்றையும் மேலே கூறிய எட்டு வகையுடன் சேர்த்து பதினொன்று என்று மொழிவோரும் உள்ளார்கள் என்கின்றார் ஆசிரியர். “என்ன இருந்தாலும் வரலாறு முக்கியம் அமைச்சரே!” என்னும் வசனம் சாபகத்திற்கு வருகின்றதா? அது தான் சிறப்புப் பாயிரம்.

ஒரு நூலுக்குப் பெயரிடுவது அவ்வளவு எளிதானது அல்ல.

முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் றன்மைமுத னிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே

நூலுக்கான பெயர் கீழ்க்கண்ட வகைகளால் உருவாகும் என்கின்றார் ஆசிரியர்!

1. முதல் நூலால்
2. நூலை உருவாக்கியவரால் (கருத்தன் - எவ்வளவு அழகிய சொல்லாடல்?)

3. நூலின் அளவால் (அளவு)
4. மிகுதியாக இருப்பதால் (மிகுதி)
5. நூலின் பொருளால் (பொருள்)
6. நூலை உருவாக்கப் பொருள் உதவி செய்தவனால் (செய்வித்தோன்)
7. அந்த நூலின் குணத்தால் (தன்மை) ஆகிய காரணங்களாலும் (முதநிமித்தினும்)
8. இடுகுறியால்

நூலுக்குக் கிடைக்கும் பெயர்.

எடுத்துக்காட்டுடன் காண்போமா?

1. முதல் நூல் - பாரதம்
2. நூலை உருவாக்கியவரால் - தொல்காப்பியம்
3. அளவால் - நாலடியார், பழமொழி நானூறு
4. மிகுதியால் - களவியல்
5. பொருளால் - அகப்பொருள்
6. செய்வித்தவன் பெயரால் - சாதவாகனம்
7. தன்மையால் - நன்னூல்!
8. இடுகுறியால் - கலைக்கோட்டுத் தண்டு

(நன்றி: தமிழ் மெய்நிகர் பல்கலைக்கழகம்)

தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்ப்
பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப

பலவகையாக விரிந்து கிடப்பதை ஒன்றாகத் தொகுத்தலும், அவ்வாறு தொகுத்து இருப்பதை விரித்தலும், தொகுத்தும் விரித்தும் செய்தலும், மொழிபெயர்ப்பும் ஆக நூலின் யாப்பு நான்கு (ஈரிரண்டு என்று இங்கும் கணிதம்!) எனப்படும்.

தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் றகுமுரை காரனென்
றின்னோர் பாயிர மியம்புதல் கடனே

தனது ஆசிரியர், தன்னோடு கற்றவர், தனது மாணாக்கர், தனது நூலுக்கு தக்க உரைசெய்தவர் ஆகிய நால்வரில் யாரேனும் ஒருவர் பாயிரம் (பாடலின் வரலாறு) இயம்புதல் கடனாகும்.

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்றற் புகழ்தல் தகுதி யன்றே

இதுவரை யாருக்கும் தோன்றாத பல வித நுட்பங்களுடனும் சிறந்து பல துறைகளில் விரிந்த நூலைச் செய்தாலும் தன்னையே தான் புகழ்ந்து கொள்தல் தகுதியுடையது அன்று. அடக்கமாக இருத்தலின் அவசியத்தையும் தற்பெருமையின் கீழ்த்தன்மையையும் இங்கே உரைக்கின்றார் ஆசிரியர்.

இருந்த போதிலும் கீழ்க்காணும் இடங்களில் தன்னைப் பற்றித் தானே சிறப்பாகப் புகழ்ந்து கூறலாம் என்றும் அதனால் தவறில்லை என்றும் விதிவிலக்கு தருகின்றார். காண்போமா?

மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினுந்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினுந்
தன்னை மறுதலை பழித்த காலையுந்
தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோற்கே

1. மன்னனுடைய அவையில் ஓலைத்தூக்கிலும் (சீட்டுக் கவியில் - பாரதியின் சீட்டுக்கவியைப் படித்தால் புரியும்)

2. தன்னுடைய ஆற்றல் யாதென்று உணரார் இடத்திலும் (தன்னுடைய கல்வி வலிமை அறியாதவரிடத்தில்)
3. பெரிய அவையில் வாதிட்டு வெல்லும் போதும் (தற்போதைய பட்டிமண்டபம்?)
4. தன்னை எதிரி யாரேனும் பழிக்கும் போது அதற்குப் பதிலளிக்கும் போதும்

ஆகிய நான்கு இடங்களில் புலவர்கள் தன்னைப் புகழ்தலும் தகும் என்கின்றார் ஆசிரியர்.

ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே

ஆயிரம் இதழ்களை அல்லது உறுப்புகளைக் கொண்டு அகன்றதாக ஆனாலும் பாயிரம் எனப்படும் பாடலின் வரலாறு இல்லாதது நூல் என்று அழைக்கப்படாது என்று பாயிரத்தின் சிறப்பை எடுத்தியம்புகின்றார் ஆசிரியர்!

மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோ ணல்லார்க் கணியும்போல் - நாடிமுன்
ஐதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது

ஒரு அழகிய மாடத்தில் அமைந்த சித்திரமாகவும், ஒரு மாநகருக்கு அழகு ஊட்டும் கோபுரமாகவும், மூங்கில் போல் அழகிய தோள் அமைந்த (ஆடமைத்தோள் நல்லார்க்கணியும்) மங்கையர் அணியும் அணிகலனாகவும் நாடி, நூல் குறித்த அழகிய (முன் ஐதுரையா நின்ற வணிந்துரையை) பாயிரத்தை எவ்வகையான சிறந்த நூலுக்கும் பெரும்பாலும் முன்னதாக வைத்தனர் புலவர் பெருமக்கள் என்று சிறப்புப் பாயிரத்தின் இலக்கணத்தை முடித்து வைக்கின்றார் ஆசிரியர்.

இனி நன்னூலின் சிறப்பான சிறப்புப்பாயிரத்தோடு இந்நூற்பாதையை நிறைவு செய்வோம்.

நன்னூலின் சிறப்புப்பாயிரம்:

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னொருதா னாகி முதலீ
றொப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் னலர்தரு தன்மையின்
மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும்
முனிவற வருளிய மூவறு மொழியுளுங்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்
அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதுந்
தனதெனக் கோலித் தன்மத வாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை வினோத னமரா பரணன்
மெழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே .

சூரியன் தன் கிரணத்தினாலே புற இருளை அகற்றிக் கண்ணுக்கு உருவங்களை விளக்குதல் போலக் , கடவுள் தன் கருணையினாலே அகவிருளை அகற்றி அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருளையும் விளக்கப்பெற்ற பதினெட்டு மொழிகளிலும், கிழக்கே கீழ்கடலும் தெற்கே கன்னியாகுமரியும் மேற்கே குடகநாடும் வடக்கே திருவேங்கடமும் எல்லையாகவுடைய நிலத்து மொழியாகிய தமிழ் மொழிக் கடலினுள், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணத்தையும் இலக்கியப் பயிற்சியின் வலியவரேயன்றி எளியவரும் அறியும் பொருட்டுத் , தொகுத்தும் வகுத்தும் விரித்தும் செய்யப்படும் யாப்பினால் செய்து தருக எனச் சீயகங்கன் சொல்லத் , தொல்லாசிரியர் நூலின் வழியே ; நன்னூல் என்னும் பெயரினால் செய்தனன் பவணந்தி முனிவன்.

(நன்றி தமிழ் மெய்நிகர் பல்கலைக்கழகம்)

இச்சிறப்புப் பாயிரத்தில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு பதினொன்று அம்சங்களும் குறிப்பிடப்பெற்றிருக்கின்றது.

ஆக்கியோன் பெயர்	பவணந்தி முனிவன்
வழி	முன்னோர் நூலின் வழி
எல்லை	குணகடல் குமரி குடகம் வேங்கடம் என்னும் நான்கு எல்லை
நூற்பெயர்	நன்னூல்
யாப்பு	நிகண்டு கற்று, இலக்கியப் பயிற்சி செய்தபின் இந்நூல் கேட்கத் தக்கது
நுதலிய பொருள்	அரும்பொருள் ஐந்து
கேட்போர்	இலக்கியப் பயிற்சி செய்தவர்
பயன்	மொழித்திறத்தின் முட்டறுத்தல்
காலம்	சீயகங்கன் காலம்
களம்	சீயகங்கன் சபை
காரணம்	சீயகங்கன் கேட்டுக் கொண்டதும் யாவரிடத்தும் இரக்கம் உடைமையும்

இவ்வாறு சிறப்புப் பாயிரத்தை நூலின் முன் செய்வதால் நமக்கு எத்தனை அரிய தகவல்கள் கிடைக்கின்றன? எனவே தான் நூலின் வரலாறு முக்கியம் என்றும் அதை நூலுக்கு முன்பாகவும் அறிமுகமாகத் தொகுத்திருக்கின்றனர் நம் முன்னோர்கள்.

அவ்வாறு பொதுப்பாயிரம் மற்றும் சிறப்புப் பாயிரம் என்றும் இருந்ததால் தானே நன்னூல் என்பதற்கு இலக்கணமாகவும் வரலாறாகவும் ஒரு நல்ல நூல் எவ்வாறிருக்க வேண்டும் என்றும், ஆசிரியராகப் பட்டவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும், மாணவர்கள் எவ்வாறு கற்க வேண்டும் என்பது குறித்தும் நாம் தெரிந்து கொள்ள முடிந்தது?

நூலுக்கான அறிமுகமே இவ்வளவு சிறப்புடையதாயின் நூலின் சிறப்பை அளவிட முடியுமோ? முன்பே குறிப்பிட்டது போல் தமிழ் மொழிக்கடலின் இலக்கணம் சொல்ல விளையும் நன்னூல் சூத்திரத்தை விளக்கும் வன்மை அடியேனுக்குக் கிடையாது.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நோக்கோடு இதுகாறும் **"நூற்பாதை"** என்ற பெயரில் தற்கால விளக்கம் ஒன்றை நல்கும் வாய்ப்பினை எல்லாம் வல்ல இறையும் சிவகாசி பட்டயக் கணக்காளர் அமைப்பின் கிளையும் அடியேனுக்கு வழங்கினர். நன்னூலின் சிறப்பையும், அதில் குறிப்பிட்டிருக்கும் அறிவியல் பூர்வமான ஆசிரியர், மாணவர் கற்பித்தல் கற்றல் முறையை அறிந்து அனைவரும் மென்மேலும் சிறக்க இத்தொடர் உதவுமாயின் மிக்க மகிழ்ச்சி அடைவேன். அதற்கு எல்லாம் வல்ல இறையை வேண்டி அமைகின்றேன்.

இத்தொகுப்பிலும் விரிப்பிலும் ஏதேனும் தவறிருப்பின் அதைப் பெருந்தன்மையுடன் மன்னிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இதுகாறும் தொடர்ந்து வாசித்த அனைவருக்கும் நன்றி!